


புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351

ISSN: 2582–5518




ஞாயிறு ❖ செப்டம்பர். 17, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 345 ❖ ரூ.10

## ஒரே நாடு ஒரே தேர்தல் ஆலோசனைக் குழுவின் முதல் கூட்டம்

# தொடங்குகிறது

## செப்டம்பர் 23-ம் தேதி நடைபெறும் என்று அந்தக் குழுவின் தலைவரும், முன்னாள் குடியரசுத் தலைவருமான ராம்நாத்கோவிந்த் அறிவிப்பு

புதுடெல்லி , செப்.17–

ஒரே நாடு ஒரே தேர்தல் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள குழுவின் முதல் ஆலோசனைக் கூட்டம் வரும் 23–ம் தேதி நடைபெறும் என்று அந்தக் குழுவின் தலைவரும், முன்னாள் குடியரசுத் தலைவருமான ராம்நாத் கோவிந்த் தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றத் தேர்தல், சட்டமன்றத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தல் ஆகியவற்றை ஒன்றாகநடத்துவதுகுறித்து ஆய்வு செய்வதற்காக முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் மத்திய அரசு கடந்த 2–ம் தேதி ஒரு குழுவை அமைத்தது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, காங்கிரஸ் கட்சியின் மக்களவைத் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, மாநிலங்களவை முன்னாள் தலைவர் குலாம் நபி ஆசாத், 15–வது நிதி ஆணையத்தின் முன்னாள் தலைவர் என்.கே. சிங், மக்களவை முன்னாள் பொதுச் செயலாளர் சுபாஷ் காஷ்யப், மூத்த வழக்கறிஞர் ஹரிஷ் சால்வே, முன்னாள் ஊழல் கண்காணிப்பு ஆணையர் சஞ்சய் கோத்தாரி ஆகியோர் குழுவின்உறுப்பினர்களாக அறிவிக்கப்பட்டனர். கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக சட்ட அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வால் பங்கேற்பார் என்றும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மத்திய அரசின் இந்த அறிவிப்புக்கு எதிர்க்கட்சிகள் தரப்பில் கடும் விமர்சனமும் எதிர்ப்பும் ஏற்பட்டது. முன்னாள் குடியரசுத் தலைவர் தலைமையில் குழு அமைத்தது மரபு மீறிய தவறான செயல் என காங்கிரஸ் விமர்சித்தது. “முன்னாள் குடியரசு தலைவர் ஒருவரை ஒரு கமிட்டியின் தலைவராக அரசு நியமிப்பதை இப்போதுதான் நான் முதன்முறையாகப் பார்க்கிறேன். ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்து ஆய்வு செய்வதற்கான குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி அல்லது ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரை நியமித்திருக்கலாம்.

புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை குடியரசுத் தலைவரைக் கொண்டு திறக்காமல், பிரதமரைக் கொண்டு திறந்ததன் மூலம், குடியரசுத் தலைவர் பதவிக்கு இருக்கும் கண்ணியத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர். தற்போது முன்னாள் குடியரசுத் தலைவர் ஒருவரை ஒரு குழுவின் தலைவராக நியமித்து மரபை மீறியுள்ளனர். இதன் மூலம் தவறான பாரம்பரியத்தை உருவாக்கிஇருக்கிறார்கள்” என காங்கிரஸ் மூத்த தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பிரமோத் திவாரி விமர்சித்திருந்தார். திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்து வருகின்றன.

இந்நிலையில், ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்த ஆய்வுக் குழுவின் முதல் ஆலோசனைக் கூட்டம் வரும் 23–ம் தேதி நடைபெறும் என்று முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தெரிவித்துள்ளார்.

## ரூ.1,000 கொடுத்து வாக்குகளை பெறலாம் என்ற தி.மு.க.வின் கனவு பலிக்காது எடப்பாடி பழனிசாமி

சென்னை , செப்.17–

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறி இருப்பதாவது:- 2021-ல் நடைபெற்ற சட்டமன்றப் பொதுத்தேர்தல்நேரத்தில் அளிக்கப்பட்ட 520-க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளில், 99 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டதாகவும், மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாய் வழங்குவதன் மூலம் நூற்றுக்கு நூறு சதவீதம் வாக்குறுதிகள் நிறைவேற்றப் பட்டதாகவும், தி.மு.க. அரசின் முதலமைச்சர் ஸ்டாலின் வாய் பந்தல் போட்டுள்ளார். ’தமிழகத்தில் உள்ள குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் மாதந்தோறும் 1,000 ரூபாய் உரிமைத் தொகை வழங்குவோம்’ என்று 2021 தேர்தல் அறிக்கையில் கூறிவிட்டு, ஆட்சிக்கு வந்து 28 மாதங்களாக தாய்மார்களை ஏங்க வைத்துவிட்டு இப்போது, பாதிக்கும் குறைவான மகளிருக்கு மட்டும் மாதம் 1,000 ரூபாயை வழங்கி, நாக்கில் தேன் தடவும் வேலையில் இந்த தி.மு.க. அரசு ஈடுபட்டுள்ளதை



வன்மையாகக் கண்டிக்கிறேன்.

’சொல் ஒன்று-செயல் ஒன்று’ என்று செயல்படுவதில் வித்தகரான முதலமைச்சர், குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் மாதந்தோறும் 1,000 ரூபாய் வழங்கப்படும் என்று வாய் பந்தல் போட்டுவிட்டு, யாராலும் ஏற்க முடியாத ஆயிரத்தெட்டு நிபந்தனைகளை விதித்து, தமிழகத்தில் பாதி தாய்மார்களுக்கு மேல் பட்டை நாமம் போட்டிருப்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெரிகிறது. எனவே, தி.மு.க. தனது தேர்தல் வாக்குறுதியில் கூறியவாறு, தமிழகத்தில் உள்ள அனைத்து குடும்பத் தலைவிகளுக்கும் மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகைவழங்கவேண்டும் என்று தி.மு.க. அரசை வலியுறுத்துகிறேன்.

ஆட்சிக்கு வந்து 28 மாதங்களாக மகளிர் உரிமைத் தொகையினை வழங்காமல் காலம் தாழ்த்தி விட்டு, தற்போது குறிப்பிட்ட மகளிருக்கு மட்டும் உரிமைத் தொகை வழங்குவதன் நோக்கம், விரைவில் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது; அத்தேர்தலில் மகளிர் வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்று நினைப்பதுதி.மு.க.அரசின் முதலமைச்சருடைய நப்பாசை எண்ணம்தான். தி.மு.க.வின் இந்த பகல் கனவு பலிக்காது. தி.மு.க. அரசு பெண்கள் மீது அக்கறை கொண்டு இந்த உரிமைத் தொகையை வழங்கவில்லை என்பதும், பாராளுமன்ற பொதுத்தேர்தலில் மகளிரின் வாக்குகளைப் பெறுவதற்காகத்தான் உரிமைத் தொகை வழங்கப்படுகிறது என்பதும், மக்களுக்கு நன்றாகவே தெரியும்.

தி.மு.க. அரசு பதவியேற்ற 28 மாத காலத்தில், இரண்டு முறை உயர்த்தப்பட்ட மின் கட்டணம், சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டணம்; பலமுறை உயர்த்தப்பட்ட பால் மற்றும் பால் பொருட்களின் விலை அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் கடுமையான விலையேற்றம்; குறிப்பாக கடந்த இரண்டு மாதங்களில் ஒரு கிலோ அரிசியின் விலை ரூ. 20 வரை உயர்ந்துள்ளது. காய்கறிகளின்விலைஉயர்வு போன்றவைகளினால், அன்றாட வாழ்வில் ஒவ்வொரு குடும்பத்தினரின் மாதச் செலவுகளும் குறைந்தபட்சம் 10 ஆயிரம் ரூபாய் வரை கூடியுள்ளது. இந்நிலையில், பல சிரமங்களை அனுபவித்து வரும் தாய்மார்களில், பாதிக்கும் குறைவான மகளிருக்கு உரிமைத் தொகையை வழங்குவது திட்டமிட்ட ஏமாற்று வேலையாகும்.”சிலரைசில நாள் ஏமாற்றலாம், பலரை பல நாள் ஏமாற்றலாம்; எல்லோரையும் எல்லா காலங்களிலும் ஏமாற்ற முடியாது’’ என்பதை முதலமைச்சருக்கு மக்கள் உணர்த்தும் காலம் வெகு தொலைவில் இல்லை. இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

## சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் எம்எல்ஏ ராஜா வைத்த கோரிக்கையின் பேரில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றது

சங்கரன்கோவில், செப்.17–

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் தற்போது பல்வேறு வசதிகள் செய்யப்பட்டு வருகின்றது. சங்கரன்கோவில் தொகுதியை திமுக கைப்பற்றியது முதல் சங்கரன்கோவில் மருத்துவமனைக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டுமென அமைச்சர்கள் அதிகாரிகளிடம் வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ வைத்த கோரிக்கையின் அடிப்படையில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன.



காசநோய் கண்டறியும் கருவி, ரூபாய் 9கோடியில் மருத்துவ கட்டிடங்கள், தீவிர சிகிச்சை பிரிவு, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 500 படுக்கை வசதிகள் மற்றும் படுக்கை விரிப்புகள், தண்ணீர்தேக்கதொட்டி, 25.00 லட்சம் மதிப்பீட்டில் சலவை கூடம், ரூபாய் 25 லட்சம் மதிப்பீட்டில் சலவை இயந்திரம், மற்றும் சி டி ஸ்கேன் வசதி , அனைத்து வகையான நோய்களுக்கும் சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன, இந்நிலையில் வரும் செப் 21, 22, 23 ஆகிய தேதிகளில் தேசியதரச்சான்று வழங்குவதற்கான ஆய்வு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் நடக்க உள்ளது.

இந்த ஆய்வை முன்னிட்டு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையை வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ ஆய்வு செய்து மருத்துவர்கள் உடன் ஆலோசனை நடத்தினார், தொடர்ந்துமருத்துவமனையின் அனைத்து பகுதிகளுக்கும் சென்று நடைபெற்று வரும் பணிகள், நடந்துமுடிந்த பணிகள் உள்ளிட்டவைகளை ஆய்வு செய்தார். தொடர்ந்து பேசிய வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சிடி ஸ்கேன் வசதி விரைவில் ஏற்படுத்தப்படும் எனவும், அதற்கான பணிகள் முடியும் தருவாயில் உள்ளதாகவும், எனவே தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் அனைத்து வகையான சிகிச்சைகளையும் பெற்றுக் கொள்ளலாம் எனவும்,

தற்போது சங்கரன்கோவில் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் தைராய்டு, குடலிறக்கம் , கடுமையான எலும்பு முறிவு, மார்பக புற்றுநோய் கட்டி அகற்றல் ,ஹீமோதெரபி உள்ளிட்ட பல்வேறு மருத்துவ அறுவைசிகிச்சைகளை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை மருத்துவ குழுவினர் சிறப்பாக செய்து வருகின்றனர்.டான்சில்அறுவை சிகிச்சை என்பது மாவட்ட தலைமை மருத்துவமனை அல்லது மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் செய்யப்பட்டுள்ள நிலையில் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் இரண்டு நோயாளிகளுக்கு வெற்றிகரமாக தைராய்டு அறுவைசிகிச்சை செய்யப்பட்டு பாதிக்கப்பட்ட நோயாளிகள் தற்போது முழு குணமடைந்து உள்ளனர். இந்த அறுவை சிகிச்சையை செய்து முடித்த சங்கரன்கோவில் மருத்துவமனை மருத்துவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினார்.

ஆய்வின் போது தென்காசி மாவட்ட மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் ஜெஸ்லின், அரசு சங்கரன்கோவில் மருத்துவமனை தலைமை குடிமை மருத்துவர் செந்தில் சேகர், திமுக மாவட்ட பொருளாளர் சரவணன், நகரச் செயலாளர் பிரகாஷ்,இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கார்த்தி, அன்சாரி, மாணவரணி வீரமணி, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர் சங்கர் ,வக்கீல் சதீஷ், ரகுமான், ஜெயக்குமார், பிரகாஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தில் நாடாளுமன்றத்துடன் சட்டமன்றத்துக்கும் தேர்தல் அரியலூரில் மாஜி தலைமை கொறடா ஆருடம்

அரியலூர், செப்.17–

தமிழகத்தில் நாடாளுமன்றத்துடன், சட்டமன்றத்துக்கும் தேர்தல் நடைபெறும் என, அரியலூரில் அதிமுக சார்பில் நடைபெற்ற, அண்ணா பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில், அரசின் முன்னாள் தலைமை கொறடா, தாமரைஎஸ்.ராஜேந்திரன் கூறினார்.



பேரறிஞர் அண்ணாவின் 115 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, அரியலூர் சட்டமன்றத் தொகுதி அதிமுகசார்பில்,அரியலூர் பழைய பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற பொதுக்கூட்டத்துக்கு, அதிமுக அரியலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் பொய்யூர் எஸ். பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். தா பழூர் மேற்கு ஒன்றிய செயலாளர்எம்.அசோகன் வரவேற்று பேசினார். முன்னாள் அமைச்சர் எஸ். ராமச்சந்திரன், கரூர் சுந்தரம், ஆகியோர் சிறப்புரையாற்றிய இக்கூட்டத்தில், அதிமுக அரியலூர் மாவட்ட செயலாளரும், முன்னாள் அரசு தலைமை கொரடாவுமான தாமரை எஸ். ராஜேந்திரன் பேசியதாவது:

முந்தைய அதிமுக ஆட்சியில், அரியலூருக்கு அரசு மருத்துவக் கல்லூரியும், ஜெயங்கொண்டத்திற்கு அரசு கலை அறிவியல் கல்லூரியும் வழங்கப்பட்டது. மேலும் திருமானூர் பகுதியில் உள்ளவைப்பூர்கிராமத்தில், கொள்ளிடம் ஆற்றில் 23 கோடி ரூபாய் செலவில், விவசாயமேம்பாட்டுக்காக தடுப்பணை கட்ட திட்டமிட்டு, அடிப்படை பணிகள் துவக்கப்பட்டது. ஆனால் அடுத்து வந்த திமுக அரசு, தடுப்பணை கட்டும் திட்டத்தை ரத்து செய்துவிட்டது.

எடப்பாடியாரின் பொற்கால ஆட்சியில், தமிழகத்தில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் துவக்கப்பட்டன. ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி நடத்தும் திமுகவால், ஒரு மருத்துவக் கல்லூரி கூட பெற வக்கில்லை. அது மட்டுமல்லாது எடப்பாடி ஆட்சி காலத்தில் பெறப்பட்ட மருத்துவக் கல்லூரிகளையும், அதனுடன் இணைந்த மருத்துவமனைகளையும், முழுமையாக செயல்படுத்துவதற்கு கூட, திமுக அரசு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. தலைமை கழகத்தின் உத்தரவைப் பெற்று, கையாலாகாத இந்த திமுக அரசை கண்டித்து, அரியலூரில் அதிமுக சார்பில் போராட்டம் நடத்தப்படும்.

அரியலூரில், ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்ற கட்டிடம் அமைய, ஹெச் ஆர் என் சி இடத்தைபெற்றுதந்தோம். ஆனால் இரண்டரை ஆண்டுகளாகியும், திமுக அரசு மேல் நடவடிக்கை எதுவும்எடுக்கவில்லை.நீட் தேர்வை ரத்து செய்வோம் என பொய்யான வாக்குறுதியை கொடுத்து திமுக ஆட்சிக்கு வந்தது. அதைநிறைவேற்றமுடியாத திமுக,தற்போதுமேலும்ஒரு பொய்யை கூறி வருகிறது. "திமுக ஆட்சிக்கு வந்தால் தமிழகம் சுடுகாடாக மாறிவிடும்"என, தமிழருவி மணியன் கூறினார். அவர் கூறியபடி இப்போதுநடந்து கொண்டிருக்கிறது.

எடப்பாடியார் புதுடெல்லிசென்று,மத்திய அமைச்சர்களை சந்தித்து விட்டுதிரும்பிவந்துள்ளார். தமிழகத்தில்நாடாளுமன்றத் தேர்தலுடன், சட்டமன்றத்துக்கும்சேர்ந்து தேர்தல் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. அத்தகைய சூழ்நிலையில், தமிழகம், புதுவை உட்பட, 40 பாராளுமன்ற தொகுதிகளிலும், அதிமுக அமோக வெற்றி பெறும். சட்டமன்றத்தில் அதிமுக அறுதி பெரும்பான்மை பெற்று, எடப்பாடியார் மீண்டும்தமிழகமுதல்வராக பொறுப்பேற்பார். இவ்வாறு தாமரை ராஜேந்திரன் பேசினார்.

முன்னாள் மாநிலங்களவைஉறுப்பினர் ஆ. இளவரசன், அதிமுக மாவட்ட அவை தலைவர் ஜெயங்கொண்டம் ராமஜெயலிங்கம், மாநில எம்ஜி ஆர் இளைஞர் அணி துணைச்செயலாளர் அறிவு என்றசிவசுப்பிரமணியன், உள்ளிட்டோர் பேசினார்கள்.

மாவட்ட ஊராட்சி கவுன்சிலர்பாளையங்கரை ராஜேந்திரன்,பொதுக்குழு உறுப்பினர் வைப்பம் சிவபெருமாள், ஜெயங்கொண்டம்வடக்கு ஒன்றியசெயலாளர்விக்ரம பாண்டியன், ஆண்டிமடம் சேர்மன் மருதமுத்து, தா.பழூர் வைத்தியநாதன், திருமானூர் மேற்கு சாமிநாதன்,தாமரைக்குளம் ஊராட்சி மன்ற தலைவர் பிரேம்குமார், முன்னாள் நகராட்சி கவுன்சிலர் சிவஞானம் மற்றும் அதிமுக மாவட்ட ஒன்றிய வட்டார நிர்வாகிகள், கட்சியின் பல்வேறு அணி நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தின் முடிவில் அதிமுக அரியலூர் நகரசெயலாளர் ஏ.பி. செந்தில் நன்றி கூறினார்.




## உ.பி.: லக்னோவில் வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்து விபத்து ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் உயிரிழப்பு.!

லக்னோ, செப். 17,

உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு மாநில முதல்-மந்திரி யோகி ஆதித்யநாத் இரங்கல் தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம் ஆனந்த் நகர் பகுதியில் உள்ள பழைய ரெயில்வே காலனியில் அமைந்துள்ள வீட்டின் மேற்கூரை திடீரென இடிந்து விழுந்து விபத்து ஏற்பட்டது. இந்த சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததும் போலீசார் மற்றும் தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர்.



இந்த விபத்தில் வீட்டில் இருந்த 3 குழந்தைகள் உட்பட 5 பேர் இடிபாடுகளுக்குள் சிக்கினர். அவர்களை மாநில பேரிடர் குழு மற்றும்உள்ளூர்போலீசார் மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவர்கள் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் அறிவித்தனர்.

இந்த விபத்து குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு மாநில முதல்-மந்திரி யோகி ஆதித்யநாத் இரங்கல் தெரிவித்துள்ளார்.

# இன்று

# 17-9-2023




பிரதமர் நரேந்திர மோடி பிறந்த நாள் | தந்தை பெரியார் பிறந்த நாள்

சக வருடம் 1945 பாத்ரபதம் 26
மஞ்சள் வேப்பிலை அரைத்து பூசினால் சரும நோய்கள் குணமாகும்

| சோபகிருது ஆவணி 31 | SEP - SUN ஞாயிறு | ரபிஉல் அவ்வல் 1 / வளர்பிறை 260 / 105 |
|---|---|---|

வளர். துவிதியை 11.51 (கா. 10.47) ஹஸ்தம் 11.15 (கா.10.33) தியாஜ் 32.25 அகஸ் 30.14 அமிர்த 11.15 மேல் சித்த. கூடமுகூர்த்தம். பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் மாலையில் தேரில் பவனி, சந்தன காப்பு, யானை வாகன புறப்பாடு. மழை பெய்ய வாய்ப்பு.

| | நல்லநேரம் | கௌ.த.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.45-8.45 | 10.45-11.45 | 04.30 | 03.00 | 12.00 |
| மாலை | 3.15-4.15 | 1.30-2.30 | 06.00 | 04.30 | 01.30 |


சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம் | சிம்ம லக்னம் இருப்பு நா. 0 வி. 10 | சந்திராஷ்டமம் பூரட்டாதி உத்திரட்டாதி
கரணம் : 10.30-12 | சூரிய உதயம் : 6.03

எலி வளையானாலும் தனி வளை வேண்டும்

**இராசிபலன்**

| | |
|---|---|
| மேஷம் | அசதி |
| ரிஷபம் | சினம் |
| மிதுனம் | வரவு |
| கடகம் | நட்பு |
| சிம்மம் | நலம் |
| கன்னி | நன்மை |
| துலாம் | முயற்சி |
| விருச்சி | வீரம் |
| தனுசு | அன்பு |
| மகரம் | நிறைவு |
| கும்பம் | கவலை |
| மீனம் | அமைதி |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# குற்றப் பத்திரிகையில் பெயர் சேர்க்காமல் இருக்க ரூ.1 லட்சம் லஞ்சம் வாங்கிய டிஎஸ்பி கைது

திருச்சி ,செப்.17-

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் இந்திரா நகரைச் சேர்ந்தவர் புலிகேசி மனைவி ராதா(45). ஆவண எழுத்தரான இவர், 2019-ல் திருவெறும்பூரைச் சேர்ந்த சுந்தரம் என்பவருக்குச் சொந்தமான மனையை, போலி ஆவணங்கள் மூலம் அதேபகுதியைச் சேர்ந்த குமார் என்பவருக்கு பத்திரப் பதிவு செய்து கொடுத்துள்ளார்.

இதனால் பாதிக்கப்பட்ட சுந்தரம் அளித்த புகாரின்பேரில், குமார்,ஆவண எழுத்தர் ராதா உள்ளிட்ட 8பேர் மீது மாவட்ட நில அபகரிப்புப் பிரிவு போலீஸார் வழக்கு பதிவு செய்து, விசாரித்து வந்தனர். தற்போது



இந்த வழக்கை மாவட்ட குற்றப் பிரிவு போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

இந்நிலையில், இந்த வழக்கு தொடர்பாக, குற்றப் பிரிவு டிஎஸ்பி ஆல்பர்ட் (53), சில நாட்களுக்கு முன் ராதாவிடம் விசாரணை நடத்திஉள்ளார்.அப்போது, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட உள்ள குற்றப் பத்திரிகையில் ராதாவின் பெயரைச் சேர்க்காமல் இருக்க, டிஎஸ்பி ஆல்பர்ட் ரூ.1 லட்சம் லஞ்சம் கேட்டதாகத் தெரிகிறது.

லஞ்சம் கொடுக்க விரும்பாத ராதா, இதுகுறித்து மாவட்ட லஞ்ச ஒழிப்புப் போலீஸில் புகார் அளித்தார். போலீஸார் ஆலோசனைபடி, மாவட்ட குற்றப் பிரிவு அலுவலகத்தில் இருந்த டிஎஸ்பி ஆல்பர்ட்டிடம் நேற்று ரூ.1 லட்சத்தை ராதா கொடுத்தார். அப்போது, அங்கு மறைந்திருந்தலஞ்சஒழிப்புப் பிரிவுடிஎஸ்பிமணிகண்டன் மற்றும்போலீஸார்,டிஎஸ்பி ஆல்பர்ட்டை கைது செய்தனர்.

பின்னர், கைது செய்யப்பட்ட டிஎஸ்பி ஆல்பர்ட், திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

# புதுக்கோட்டையில் பொறியாளர் தின விழா கொண்டாட்டம்

புதுக்கோட்டை ,செப்.17-

பொறியாளர் தின விழா கொண்டாட்டம் சென்ட்ரல்ரோட்டரிசங்கம் திசிங்கப்பூர் எலக்ட்ரிகல்ஸ் & பைப்ஸ் நிறுவனம் இணைந்து நடத்திய பொறியாளர் தின விழா கொண்டாடப்பட்டது.

பாரத ரத்னா மோக்ஷ குண்டம் விஸ்வேஸ்வரய்யா பிறந்த தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் பொறியாளர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதனை முன்னிட்டுபுதுக்கோட்டை சென்ட்ரல் ரோட்டரி சங்கம் மற்றும் தி சிங்கப்பூர் எலக்ட்ரிகல்ஸ் & பைப்ஸ் இணைந்து பொறியாளர் தின விழாவை ஆலங்குடி ரோட்டில் உள்ள தி சிங்கப்பூர் எலக்ட்ரிகல்ஸ் & பைப்ஸ் ஷோரூம் கொண்டாடியது.

இந்த விழாவில் சென்ட்ரல் ரோட்டரி சங்கத் தலைவர் கார்த்திகேயன் தலைமை தாங்கினார் தி சிங்கப்பூர் எலக்ட்ரிகல்ஸ் & பைப்ஸ் நிர்வாக இயக்குனர் காஜா மைதீன்



வரவேற்புரை ஆற்றினார். பொறியாளர்கள் பஷீர் முகமது, வெங்கடாச்சலம் , மதிவாணன் முன்னிலை வகித்தார்கள் சிறப்பு விருந்தினராக மவுண்ட் சீயோன் பொறியியல் கல்லூரி இயக்குனர் ஜெய்சன் கீர்த்தி ஜெயபாரதன் கலந்து கொண்டு சிறப்பித்தார். கௌரவ விருந்தினராக கட்டிட பொறியாளர்கள் சங்கத் தலைவர் ரமேஷ் கலந்து கொண்டு சிறப்பித்தார். மேலும் பொறியாளர்கள் கனகராஜ்,பாரூக்,ராஜதுரை, முரளி, சுப்பிரமணியன், ரவி, அரவிந்த், சாதிக், அறந்தாங்கி கலைச்செல்வம் மற்றும் பொறியாளர்கள் பலர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். இந்நிகழ்வில் பொறியாளர்கள் அனைவரையும் தி சிங்கப்பூர் எலக்ட்ரிகல்ஸ் & பைப்ஸ் சார்பாக கௌரவம் செய்யப்பட்டு வாழ்த்தினர். நன்றியுரை சென்ட்ரல் ரோட்டரி சங்க தலைவர் பெர்லின் தாமஸ் வழங்கினார். நிகழ்ச்சிகளின் ஏற்பாடுகளை ரோட்டரி சங்க முன்னாள் தலைவர் ஜெய் பார்த்திபன், அஜ்மீர் கான் மற்றும் தி சிங்கப்பூர் எலக்ட்ரிக்கல்ஸ் & பைப்ஸ் ஊழியர்கள் செய்திருந்தார்கள்.




# விநாயகர் சிலை தயாரிப்பு கூடத்திற்கு 'சீல்' பாரதிய ஜனதா கண்டன ஆர்ப்பாட்டம்



நெல்லை, செப். 17,

நாடு முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா நாளை கொண்டாடப்பட உள்ளது.

இதனையொட்டி இந்து அமைப்புகள் சார்பில் விநாயகர் சிலைகள் வைக்கப்பட்டு நீர்நிலைகளில் விஜர்சனம் செய்யப்படுவது வழக்கம். இந்த ஆண்டும் சதுர்த்தி விழாவையொட்டி ரசாயன கலப்பு கொண்ட விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் கரைக்க ஐகோர்ட்டும், பசுமை தீர்ப்பாயமும் தடை விதித்துள்ளது. இதையொட்டி நெல்லை மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தி விழாவுக்காக வைக்கப்படும் விநாயகர் சிலைகள் தயாரிப்பு கூடங்களில் கடந்த சில நாட்களுக்கு முன்பு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மூலம் மாதிரிகள் சேகரித்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் பாளை சீவலப்பேரி ரோடு கிருபா நகரில் வடமாநில தொழிலாளர்கள் செய்து வரும் விநாயகர் சதுர்த்தி விழாவுக்கான விநாயகர் சிலைகள் ரசாயன கலப்பு இருப்பதாக கூறி, அங்கு தயாரிக்கப்பட்ட விநாயகர் சிலைகளை எடுத்துச் செல்வதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாவட்ட நிர்வாகம் தடை விதித்தது. இதைத்தொடர்ந்து தகரம் வைத்து அந்த கூடத்தை அடைத்து அதிகாரிகள் 'சீல்' வைத்தனர். இதற்கு நெல்லை மாவட்ட பாரதிய ஜனதா கட்சியினர் கடுமையான எதிர்ப்பு தெரிவித்தனர். வழிபடுவதற்காக செய்யப்பட்ட சிலைகளை விற்பனைக்கு வழங்காமல் தடுத்து, விநாயகர் சதுர்த்தி விழாவிற்கு தடை ஏற்படுத்தும் விதமாக உள்நோக்கத்தோடு தமிழக அரசு செயல்படுவதாக அவர்கள் புகார் கூறினர்.

மேலும் தயாரித்து வைத்துள்ள சிலைகளை விற்பனைக்கு வழங்க கோரி நெல்லை வடக்கு மாவட்ட பா.ஜனதா சார்பில் மாவட்டத் தலைவர் தயா சங்கர் தலைமையில் நேற்று வண்ணார்பேட்டை மேம்பாலம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கையில் சிறிய அளவிலான விநாயகர் சிலைகளுடன் ஏராளமானவர்கள் பங்கேற்றனர். இதில் மாவட்ட பொதுச்செயலாளர்கள் சுரேஷ், வேல் ஆறுமுகம், முத்து பலவேசம், மாவட்ட செயலாளர்கள் வக்கீல் வெங்கடாஜலபதி என்ற குட்டி, நாகராஜன், முன்னாள் மேயர் புவனேஸ்வரி, மண்டல தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இதனையொட்டி அங்கு பாளை உதவி கமிஷனர் பிரதீப் தலைமையில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

# "இது ஓர் ஒத்துழையாமை இயக்கம்" 14 ஊடகவியலாளர்களின் நிகழ்ச்சி புறக்கணிப்புக்கு காங்கிரஸ் விளக்கம்

புதுடெல்லி ,செப்.17-

"தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சிகளை நடத்தும் 14 ஊடகவியாளர்களின் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதில்லை என்பது ஓர் ஒத்துழையாமை இயக்கம்" என்று காங்கிரஸ் கட்சியின் ஊடகப் பிரிவு தலைவர் பவன் கெரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், "நாங்கள் அவர்களை தடை செய்யவில்லை. கருப்புப் பட்டியலிலும் வைக்கவில்லை. இது ஓர் ஒத்துழையாமை இயக்கம். சமூகத்தில் வெறுப்பைப் பரப்புபவர்கள் யாராக இருந்தாலும் நாங்கள் அவர்களுக்கு ஒத்துழைப்பு அளிக்க மாட்டோம். வெறுப்பைப் பரப்பும் அவர்களை எங்களால் தடுக்க முடியாது. நீங்கள் வெறுப்பைப் பரப்ப விரும்பினால், அதனைச் செய்யுங்கள். அதற்கான உரிமை உங்களுக்கு இருக்கிறது. அந்தக் குற்றத்தில் ஈடுபடாமல் இருப்பதற்கான சுதந்திரம் எங்களுக்கும் இருக்கிறது.

அவர்கள் எங்கள் எதிரிகள் அல்ல. ஊடக நண்பர்களை நாங்கள் வெறுப்பதில்லை. அவர்களுக்கு நெருக்கடி ஏதும் இருக்கலாம். எதுவும்



நிரந்தரமல்ல. அவர்கள் செய்யும் செயல் நாட்டுக்கு, சமூகத்துக்கு நல்லது அல்ல என்பதை அவர்கள் நாளை உணர்ந்தால்,அவர்களோடு நாங்களும் இருப்போம். அவர்களின் நிகழ்ச்சிகளில் மீண்டும் பங்கேற்போம். எனவே, இதனை நாங்கள் அவர்களை தடை செய்துவிட்டதாகக் கருத வேண்டாம்.

சிலர் சாலையில் குப்பைகளைக்கொட்டினால், மாற்றுப் பாதையை தேர்ந்தெடுப்பதற்கான உரிமை எங்களுக்கு இருக்கிறது. அந்தச் சுதந்திரத்தையே நாங்கள் தற்போது கடைப்பிடிக்கிறோம்.எங்கள் பாதையைமாற்றிக்கொள்ள இண்டியா கூட்டணி முடிவெடுத்திருக்கிறது. ஜனநாயகத்தின் பாதுகாவலர் ஊடகங்கள். அரசின் தவறுகளை சரி செய்யக்கூடியதாக ஊடகங்கள் செயல்பட வேண்டும். மேலும், எதிர்க்கட்சிகளின் கருத்துகளை ஊடகங்கள் ஆதரிக்க வேண்டும். ஆனால், ஊடகங்களில் உள்ள சிலர் அரசுக்கு ஆதரவாகஇருந்துகொண்டு எதிர்க்கட்சிகளை அழிக்கத் துடிக்கிறார்கள். நரேந்திர மோடி அரசின் ஆதரவோடு நடக்கும் இதழியல் இது. இதன் காரணமாகவே, இண்டியா கூட்டணி இந்த முடிவை எடுத்துள்ளது" என்று அவர் தெரிவித்தார்.

முன்னதாக,இண்டியா கூட்டணிக்கு எதிராக சில ஊடகவியலாளர்கள் செயல்படுவதாக அக்கூட்டணியைச்சேர்ந்த கட்சிகள் குற்றம்சாட்டி இருந்தன. இதன் தொடர்ச்சியாக, அதிதி தியாகி, அமன் சோப்ரா, அமிஷ் தேவ்கான், ஆனந்த் நரசிம்மன், அர்னாப் கோஸ்வாமி, அஷோக் ஸ்ரீவத்சவ், சித்ரா திருப்பதி, கவுரவ் சவந்த், நவிகா குமார், பிராச்சி பராஷர், ரூபிகா லியாகத், சிவ் அரூர், சுதிர் சவுத்ரி ஆகியோர் நடத்தும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இண்டியா கூட்டணி சார்பில் யாரும் பங்கேற்க மாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இதனை பாஜககடுமையாக விமர்சித்தது. அவசரநிலை பிரகடனத்தின்போது ஊடகங்களை நசுக்கிய காங்கிரஸ்கட்சி,இன்னமும் அதே மனநிலையில்தான் உள்ளது என அக்கட்சி குற்றம் சாட்டியது குறிப்பிடத்தக்கது.

# அரியலூர் மாவட்டத்தில் அரசு தொழில்நுட்ப கல்லூரியில் வேளாண்மை பொறியியல் ஆய்வக திறப்பு விழா

அரியலூர்,செப்.17-

அரியலூர் மாவட்ட அரசு தொழில்நுட்ப கல்லூரியில்வேளாண்மை பொறியியல் ஆய்வக திறப்பு விழா நடைபெற்றது, அரியலூர் மாவட்டம், கீழப்பழுவூர் அரசு தொழில்நுட்ப கல்லூரி; வேளாண்மை பொறியியல் ஆய்வகத்தினை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா முன்னிலையில் நடைபெற்றது, அரசு தொழில்நுட்பக்



கல்லூரி வேளாண்மை பொறியியல் ஆய்வகத்தை திறந்து வைத்த போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர், அங்குள்ள வேளாண் உபகரணங்களை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் வருவாய்கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், அரசு தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர், கு.தமிழரசு, வேளாண் பொறியியல் துறைத்தலைவர் ம.அப்பூதி அடிகள், திருமானூர் ஒன்றியக்குழுத் தலைவர் .சுமதி அசோகச்சக்கரவர்த்தி, கீழப்பழுவூர் ஊராட்சி மன்றத் தலைவர் தனலெட்சுமி மருதமுத்து மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# நிபா வைரஸ் பரவல்: சபரிமலை பக்தர்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட கேரள ஐகோர்ட் உத்தரவு

கோழிக்கோடு :செப். 17,

புரட்டாசி மாத பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோவில் நடை இன்று திறக்கப்படுகிறது.

புரட்டாசி மாத பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோவில் நடை இன்று திறக்கப்படுகிறது. அப்போது சாமி தரிசனம் செய்வதற்காக ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆன்லைனில் முன்பதிவு



செய்திருக்கிறார்கள்.

இந்நிலையில் கேரள மாநிலத்தில் நிபா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டிருப்பதால் சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கான வழிகாட்டுநெறிமுறைகளை அரசுவெளியிடவேண்டும் என்று கேரள ஐகோர்ட்டு உத்தரவிட்டு உள்ளது. அது தொடர்பாக தேவசம்போர்டு கமிஷனருடன் கலந்தாலோசித்து தேவையான முடிவை எடுக்குமாறு கேரள மாநில சுகாதாரத்துறை செயலருக்கு ஐகோர்ட்டு உத்தரவு பிறப்பித்துள்ளது.

# சென்னையில் போக்குவரத்து போலீசார் 280 பேருக்கு யோகா பயிற்சி

சென்னை, செப். 17,

சென்னையில் போலீசாரின் மன அழுத்தத்தை போக்கும் வகையில் அவர்களுக்கு யோகா, மூச்சு பயிற்சி உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்க கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர் உத்தரவிட்டுள்ளார்.

இதன் பேரில் போலீசாருக்கு அது போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் சென்னை வேப்பேரியில் போக்குவரத்து போலீசார் 280 பேருக்கு நேற்று யோகா பயிற்சி அளிக்கப்பட்டது.

வேப்பேரி அழகப்பா பள்ளியில் நடைபெற்ற



இந்த நிகழ்ச்சிக்கு போக்குவரத்து துணை கமிஷனர் சமய் சிங் தலைமை தாங்கினார். உதவி கமிஷனர்கள் கிறிஸ்டோபர், ரவி, சிவக்குமார் மற்றும் வேப்பேரி போக்குவரத்து போலீஸ் இன்ஸ்பெக்டர் பாண்டி வேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த பயிற்சி மிகுந்த பயனுள்ளதாக இருந்தது என்று போக்குவரத்து போலீசார் தெரிவித்துள்ளனர்.

# பூச்சாண்டி காட்டும் வேலை என்னிடம் வேண்டாம் சீமானுக்கு வீரலட்சுமி எச்சரிக்கை

திருவள்ளூர், செப். 17,

பூச்சாண்டி காட்டும் வேலை என்னிடம் வேண்டாம்எனசீமானுக்கு வீரலட்சுமி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சும்மா பூச்சாண்டி காட்டும் வேலை என்னிடம் வேண்டாம், சீமானிடம் இருக்கும் கூட்டத்தை விட என்னிடம் மிகப்பெரிய கூட்டம் இருக்கிறது என திருவள்ளூரில் வீரலட்சுமி பேட்டியளித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் மீதான பாலியல் புகாரின் பேரில் நடிகை விஜயலட்சுமி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த வழக்கில் தமிழக முன்னேற்ற படை தலைவர் வீரலட்சுமி நடிகை விஜயலட்சுமிக்கு ஆதரவாகபேசிவருகிறார்.

மேலும் சீமானை ஸ்கெட்ச் போட்டு தூக்கிடுவேன் என பேட்டியில் தெரிவித்திருந்தார். இந்நிலையில் இந்த வழக்கு சுமூகமாக முடிந்தால் அன்னதானம் செய்யப்போவதாக வீரலட்சுமி வேண்டியதாகவும், அதனை முன்னிட்டு திருவள்ளூர் வீரராகவர் கோயிலில் சாமி தரிசனம் செய்ய தமிழர் முன்னேற்ற படைதலைவர் வீரலட்சுமி வருகை தந்தார்.

அப்போது நாம் தமிழர் கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் 10-க்கும்



மேற்பட்டவர்கள்ஸ்கெட்ச் போட்டுதூக்கிடுவேன்னு சொன்னீங்களே.. என கூறியவாறு ஸ்கெட்ச் பேனாவை கையில் கொடுத்து களாய்த்தனர். இதனால் ஆத்திரமடைந்த வீரலட்சுமி மற்றும் அவருடன் வந்தவர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது பாதுகாப்பு பணியில் இருந்த போலிசார் சமரசம் செய்ய முயன்றனர். இதனால் அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. இதனையடுத்து தகராறில் ஈடுபட்ட நாம்தமிழர் கட்சி நிர்வாகிகளை அங்கிருந்து அப்புறப்படுத்தினர். இதனால் வீரராகவர் கோயிலில் பரபரப்பாக காணப்பட்டது.

இந்நிலையில் இதுகுறித்து திருவள்ளூரில் வீரலட்சுமி அளித்த பெட்டியில்; "சும்மா பூச்சாண்டி காட்டும் வேலை என்னிடம் வேண்டாம், சீமானிடம் இருக்கும் கூட்டத்தை விட என்னிடம் மிகப்பெரிய கூட்டம் இருக்கிறது, என்னிடம் இருக்கும் கூட்டத்தை இறக்கிவிட்டால் அவ்வளவுதான், விஜயலட்சுமியை தொலைபேசியில் தொடர்புகொண்டு சீமான் சமாதானம் செய்துள்ளார், சீமானும் விஜயலட்சுமியும் என் மீது எந்த குற்றச்சாட்டுகளை முன்வைத்தாலும் நான் ஏற்றுக் கொள்வேன், என்னுடைய நகைகளை அடகு வைத்து விஜயலட்சுமியை பாதுகாத்து வந்தேன், விஜயலட்சுமி விவகாரத்தில் தோற்றுவிட்டதால்தான் செட்டில்மென்ட் பேசியுள்ளார்சீமான்,தான் செய்ததவறுக்குவருந்தியே விஜயலட்சுமிக்கு போன் செய்து சீமான் சமாதானப்படுத்தி உள்ளார்" என திருவள்ளூரில் வீரலட்சுமி பேட்டியளித்தார்.

# காரைக்கால் மாவட்டத்தில் உலக கடற்கரை தூய்மை தினம் கடைப்பிடிப்பு



காரைக்கால், செப் 17–

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் 3-வது சனிக்கிழமை உலக கடற்கரை தூய்மை தினமாக கடைபிடிக்கப்படுகிறது. அன்றைய நாளில் உலகமெங்கும் உள்ள கடற்கரை பகுதிகளை தூய்மைப்படுத்துவது கடற்கரை பகுதிகளை தூய்மையாக வைத்து கொள்வது குறித்த விழிப்புணர்வு பிரசாரம் மற்றும் செய்முறை விளக்கங்களில் அரசு துறையினர் கடலோர காவல் படையினர் தொண்டு நிறுவனத்தினர் மற்றும் பொது நல அமைப்பினர் ஈடுபடுவது வழக்கம்.

காரைக்கால் மாவட்டத்தில் உலக கடற்கரை தூய்மை தினம் நேற்று செப்டம்பர்-16 கடைபிடிக்கப்பட்டது. காரைக்கால் மாவட்ட நிர்வாகத்தின் அறிவுறுத்தலின்படி கடற்கரை பகுதியில் தூய்மை பணி மேற்கொள்ள காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பாக துணை ஆட்சியர் வெங்கட்கிருஷ்ணன், மாவட்ட நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் தாமோதரன் லயன் சங்கம், ரோட்டரி சங்கம் தலைவர்கள் உறுப்பினர்கள். ஓ.என்.ஜி.சி. மற்றும் பல நிர்வாக சங்கங்கள் மூலமும் ஒவ்வொரு கிராம மீனவ கிராம மக்கள் மற்றும் மீனவ பஞ்சாயத்தர்கள் மூலம் நடைபெற்றது.

காரைக்காலில் உள்ள சுமார் எட்டு மீனவ கிராமங்கள் உள்ள கடற்கரையை காரைக்கால் கல்லூரி மற்றும் பள்ளிகளில் உள்ள நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் சுமார் 1500 மாணவ மாணவியர்கள் மற்றும் நாட்டு நல பணித்திட்ட அலுவலர்கள் மூலம் மிகச் சிறப்பாக அனைத்து கடற்கரையும் சுத்தம் செய்தனர். இந்த நிகழ்வில் இந்திய கடற்படை மற்றும் கடலோர காவல் படையினர், பொது நல அமைப்பை சேர்ந்தவர்கள் மற்றும் நகராட்சி துப்புரவு பணியாளர்கள் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்.

காரைக்கால் தூய்மையாக இருந்த கடற்கரை பகுதியை, தூய்மை படுத்திய நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் காரைக்காலின் பல்வேறு அமைப்புகள் பொதுமக்கள் மீனவர்கள் மீனவ கிராமத்தில் உள்ள பஞ்சாயத்தார்கள் செயலை கண்டு பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர் பாராட்டினர்.

# பூம்புகார் கடற்கரையில் உலக ஓசோன் தினத்தை முன்னிட்டு கடற்கரை தூய்மைப்பணி



மயிலாடுதுறை, செப். 17–

மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் கடற்கரையில் உலக ஓசோன் தினம் மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் கடற்கரையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தேசிய பசுமை படை மற்றும் சுற்றுச்சூழ மன்றங்கள் இணைந்து நடத்திய உலக ஓசோன் தினத்தை முன்னிட்டு கடற்கரை தூய்மைப்பணி நடைபெற்றது இந் நிகழ்ச்சிக்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தை சார்ந்த வே தமிழ் ஒளி தலைமை வகித்தார் மாவட்ட தேசிய பசுமைப் படையின் ஒருங்கிணைப்பாளர் இரா செல்வகுமார் வரவேற்புரை ஆற்றினார் நிகழ்ச்சியில் சீர்காழி ஒன்றிய பெருந்தலைவர் கமலஜோதி தேவேந்திரன் கலந்துகொண்டு கொடியசைத்து தொடங்கி வைத்தார் காவிரிப்பூம்பட்டின ஊராட்சி மன்ற தலைவர் சசிகுமார் காவேரிப்பூம்பட்டின உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் சரஸ்வதி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் கணேசன், பள்ளி மேலாண்மை குழு தலைவர் நிர்மலா ஆகியோர் முன்னிலை வகித்தனர் மயிலாடுதுறை அறம் செய்ய அறக்கட்டளையின் ஒருங்கிணைப்பாளர் சிவக்குமார் வாழ்த்துரை வழங்கினார் நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு கையுறைகளும் மஞ்சப்பைகளும் வழங்கப்பட்டன நிகழ்ச்சி ஏற்பாடுகளை அரசு உயர்நிலைப்பள்ளி காவிரிப்பூம்பட்டினத்தின் தேசிய பசுமை படை ஒருங்கிணைப்பாளர் இளையராஜா, சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் பசுமை தோழர் சிவரஞ்சனி ஆகியோர் சிறப்புரை ஏற்பாடு செய்திருந்தனர் காவேரிப் பூம்பட்டினத்தின் அரசு உயர்நிலைப் பள்ளியின் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் தூய்மை பணியில் ஈடுபட்டனர் ஓசோன் தின உறுதிமொழி எடுக்கப்பட்டது. நிறைவாக மாவட்ட சுற்றுச்சூழல்மன்றங்களின் ஒருங்கிணைப்பாளர் செ.பிரபு நன்றி கூறினார்.

# காரைக்கால் பட்டதாரி ஆசிரியர் சங்கத்தின் ஆசிரியர் தின விழா அமைச்சர், எம்.எல்.ஏ பங்கேற்பு




காரைக்கால், செப்,17

காரைக்கால் பட்டதாரி ஆசிரியர் சங்கத்தின் ஆசிரியர் தின விழா காரைக்கால் அம்மையார்மணிமண்டபத்தில் நடைபெற்றது நிகழ்ச்சிக்கு பட்டதாரி ஆசிரியர் சங்கத்தின் தலைவர். சிவக்குமார் தலைமை தாங்கினார் நிகழ்ச்சியில் புதுச்சேரி மாநில போக்குவரத்து துறை அமைச்சர் டாக்டர் சந்திர பிரியங்கா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

காரைக்கால் தெற்கு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் நாஜிம் வாழ்த்துரை வழங்கினார். மேலும் நிகழ்ச்சியில் காரைக்கால் மேல்நிலைக் கல்வி துணை இயக்குனர் ராஜேஸ்வரி மற்றும் முதன்மை கல்வி அதிகாரி விஜய மோகனா மற்றும் ஆசிரியர் கூட்டமைப்பின் தலைவர் முத்தமிழ் குணாளன் மற்றும் ஆசிரியர் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் காளிதாசன் ஆகியோர் கலந்து கொண்டு. காரை மாவட்ட பெற்றோர் சங்க தலைவர் சோழசிங்கராயர் மற்றும் பொதுச் செயலாளர் செல்வமணி கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

காரைக்கால் மாவட்ட பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் சார்பாக சிறந்த ஆசிரியர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டது.மாவட்ட அளவில் அதிகதேர்ச்சிவிழுக்காடுகாட்டிய பள்ளிகளுக்கு கேடயமும் மாவட்ட அளவில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் எடுத்த மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. அதிக தேர்ச்சி விழுக்காடு காட்டிய ஆசிரியர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டது வினாத்தாள் தயாரித்த ஆசிரியர்களுக்கும் மற்றும் பத்தாம் வகுப்பு பொதுதேர்வில் முதல் இரண்டு இடங்களை பிடித்த மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது முன்னதாக நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும் சங்கத்தின் பொதுச்செயலாளர் ராஜா வரவேற்றார் இறுதியாக சங்கத்தின் பொருளாளர் சிங்காரவேல் நன்றியுரை வழங்கினார். நிகழ்ச்சிக்கு ஏற்பாடுகளை சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# பொன்னேரி தொகுதி அதிமுக சார்பில் பேறிஞர் அண்ணாவின் 115–வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்



ஊத்துக்கோட்டை, செப்17–

திருவள்ளூர் வடக்கு மாவட்டம், பொன்னேரி தொகுதி அதிமுக சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 115-வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் 20.08.2023 அன்று மதுரையில் நடைபெற்ற மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கிக் கூறும் மாபெரும் பொதுக்கூட்டம் சோழவரம் மேற்கு ஒன்றியம்,ஆரணி பஜார் வீதியில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு, திருவள்ளூர் வடக்கு மாவட்ட கழக செயலாளரும்,பொன்னேரி தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சிறுணியம் பி.பலராமன் தலைமை தாங்கினார்.ஆரணி பேரூர் கழகச் செயலாளர் ஏ.எம். தயாளன்,சோழவரம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.பிரகாஷ், மாவட்ட மாணவரணி செயலாளர் எஸ். ராகேஷ், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் ஆரணி ஓம்சக்தி குணபூபதி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.இதில், கழக அவை தலைவரும், முன்னாள் தமிழ்நாடு வக்பு வாரிய தலைவருமான டாக்டர் அ.தமிழ்மகன்உசேன், தலைமை கழகப் பேச்சாளர் ஆரணி கே.அன்பழகன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் கே.எஸ். விஜயகுமார்,கழக அம்மா பேரவை இணைச் செயலாளர் பொன்ராஜா, கழக எம்ஜிஆர் இளைஞர் அணி துணை செயலாளர் பஞ்செட்டி கே.நடராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேரறிஞர் அண்ணாவை நினைவு கூறும் தகுதி அதிமுக கட்சிக்கு மட்டுமே உள்ளது என்பதை விளக்கி கூறினர்.

மேலும், மதுரை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை எடுத்துக் கூறினர். இக்கூட்டத்தில்,ஆரணி பேரூர் கழக பொருளாளர் மா.சேகர்,விவசாய பிரிவு செயலாளர் டில்லி, மாவட்ட மாணவரணிபொருளாளர் ஏ.எம். டி.யுவராஜ்,எம்ஜிஆர் இளைஞர் அணி மாவட்ட துணைச் செயலாளர் ஸ்ரீவிஜயன்,தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட பொருளாளர் ஜி.ராமகிருஷ்ணன், ஆரணி பா.துளசி, எம்.ஜி.விஜயன் வார்டு செயலாளர்கள் முரளி, சம்பத், டில்லி, நாகப்பன், ஏ.சி. வெங்கடேசன், மகளிர் அணி மஞ்சுளா, ஜெயந்தி மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள்,உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.முடிவில், ஆரணி அம்மா பேரவை செயலாளர் கே.என்.சீனிவாசன் நன்றி கூறினர்.நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை,திருவள்ளூர் வடக்கு மாவட்ட அதிமுக கழகம் சார்பில் சிறப்பாக செய்திருந்தனர்.



▶ அரியலூர் மாவட்டம், செந்துறை அரசு மேல்நிலைப்பள்ளி நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் அமைக்கப்பட்ட, ஆவின் பால் உப பொருட்கள் விற்பனை நிலையத்தில், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க செயல் ஆட்சியர் சி. கார்த்திகேயன், ஆவின் துணைப் பொது மேலாளர் முனியசாமி, சங்க ஆலோசகர் ஏ. கொளஞ்சிநாதன், மேற்பார்வையாளர்கள் காமராஜ், கண்ணகி, செயலாளர் (பொறுப்பு) கோ. கார்த்திகேயன், மற்றும் செந்துறை கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க பணியாளர்கள் உள்ளனர்.

# பெரம்பூர் காவல் சரகத்துக்குட்பட்ட பகுதியில் குட்கா கடத்தல்– மூவர் கைது



மயிலாடுதுறை,செப்,17

மயிலாடுதுறை அருகே டூவீலரில்குட்காகடத்தியவர்கள், கடை உரிமையாளர் உள்ளிட்ட மூவரை போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

புதுச்சேரி மாநிலம் காரைக்காலில் இருந்து மயிலாடுதுறை மாவட்ட பகுதிகளுக்கு குட்கா பொருட்கள் கடத்தப்படுவதாக புகார்கள் எழுந்தது. இதனை அடுத்துமயிலாடுதுறைமாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மீனா உத்தரவின் பேரில் எஸ்.பி. தனிப்படை சப்-இன்ஸ்பெக்டர் அறிவழகன் தலைமையிலான போலீசார் மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா பெரம்பூர் காவல் சரக்கத்திற்கு உட்பட்ட அரும்பாக்கம் பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த வழியாக வந்த டூவீலரை நிறுத்தி சோதனையிட்ட போது அதில் 55 கிலோ எடையுள்ள கூல்லிப் உள்ளிட்ட குட்கா பொருட்கள் இருந்தது தெரியவந்தது. இதனை அடுத்து அவற்றை பறிமுதல் செய்த தனிப்படை போலீசார் குட்கா பொருட்களை கடத்தி வந்த காரைக்கால் நெடுங்காடு காமராஜ் நகர் மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த நாகராஜன் மகன் ராஜா.45, நெடுங்காடு பொன் பேத்தி துரைசாமி மகன் மணிமாறன்.50. ஆகியோ வரை பிடித்து விசாரணை செய்தனர்.

விசாரணையில் இவர்கள் இருவரும் காரைக்காலில் இருந்து குட்கா பொருட்களை கடலி கிராமத்தைச் சேர்ந்த ஜெயராஜ் மகன் பொன்னரசன்.27. என்பவர் கடைக்கு கடத்தி சென்றது தெரியவந்தது. இதனை அடுத்து தனிப்படை போலீசார் கைப்பற்றப்பட்ட குட்கா பொருட்கள், டூவீலர் மற்றும் அவற்றைக் கடத்தி வந்த ராஜா, மணிமாறன், பொன்னரசன் ஆகிய மூவரையும் கைது செய்து பெரம்பூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். தொடர்ந்து பெரம்பூர் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# கோயம்பேட்டில் இருந்து வெளியூர் செல்லும் தனியார் பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிப்பதாக பயணிகள் புகார்

கோயம்பேடு, செப்,17

பண்டிகை வருகிறது என்றாலே பஸ்களில் மக்கள் முந்தியடித்து கொண்டு ஏறி சென்ற காலம் போய், தற்போது எல்லாமே ஆன்லைன் முன்பதிவாகிவிட்டது. தனியார் ஆம்னி சொகுசு பேருந்துகளையே மக்கள் அதிகம் நாடி செல்கின்றனர். பண்டிகை காலங்களில் தனியார் ஆம்னி பேருந்துகள் வசூலிக்கும் டிக்கெட் தொகையை பார்த்தல் தலையே சுற்றிப்போய்விடும் அளவுக்கு டிக்கெட் விலை உச்சத்தில் இருக்கும்.



இந்த நிலையில், வரும் திங்கட்கிழமை விநாயகர் சதுர்த்தி பண்டிகை கொண்டாடப்படுகிறது. வார விடுமுறையை தொடர்ந்து விநாயகர் சதுர்த்தி வருவதால், சென்னையில் வசிப்போர் தங்களது சொந்த ஊருக்கு பயணத்தை மேற்கொண்டுள்ளனர். இதற்காக, சென்னையில் இருந்து வழக்கத்தை விட 550 சிறப்பு அரசு பேருந்துகள் நேற்று முன் தினம் இரவு முதல் கூடுதலாக இயக்கப்பட்டன. அதே போல, ஆம்னி பேருந்து நிலையத்தில் இருந்தும் ஆயிரத்து 312 சொகுசு பேருந்துகள் இயக்கப்பட்டன. ஆனால், இது போன்ற விழாக்காலங்களில் தனியார் பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிப்பதாக பயணிகள் புகார் தெரிவித்தனர்

# கலைமகள் கல்லூரியில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

செம்பனார்கோவில் -செப்– 17:

யிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் கலைமகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ. வி.மெய்யநாதன் தொடங்கி வைத்து, தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி தலைமை வகித்தார், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உமாமகேஸ்வரி சங்கர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில், பணி நியமன ஆணைகளை வழங்கி மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் பேசியதாவது:

நமது அரசானது வெற்றிகரமான பல்வேறு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. நம் மயிலாடுதுறை மாவட்டத்தை வளர்ச்சி பாதையில் அழைத்தும் செல்லும் விதமாக இம்முகாம் இன்று நடைபெறுகிறது. மயிலாடுதுறை மாவட்டம் முதல் 3 சிறந்த மாவட்டங்களில் ஒன்றாக திகழ்கிறது. கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இம்முகாம் நடைபெறுகிறது. வேலை வாய்ப்பை உருவாக்கி தந்து, பல வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வழங்கும் விதமாக இம்முகாம் உள்ளது. இம்முகாம் நடைபெறும் கலைமகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நிறைய மரங்கள் இருப்பது மிகவும் நன்மையான ஒன்று. அதுபோல், இம்மாவட்டம் பசுமை மிகுந்த மாவட்டமாக மாற பல்வேறு மரங்களை உருவாக்க வேண்டும். பல்வேறு படித்த இளைஞர்கள், வேலைக்கு செல்லும் போது எப்படி வேலைக்கு போக போகிறோம் என்ற எண்ணத்திலும், குறைவாக சம்பளம் என்ற எண்ணத்திலும் இளைஞர்கள் வேலை தேடுவதில் மிகுந்த சிரமமான சூழல் இருந்து வந்தது, தற்போது அந்நிலை மாறி அரசே முன் வந்து பல்வேறு படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வழங்கிடும் விதமாக இம்முகாம் நடைபெறுகிறது. ஆகவே, தாங்கள் இதுபோன்ற அரசின் பல்வேறு திட்டங்களை பயன்படுத்தி கொள்ள வேண்டும். அரசு மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்தி பொருளாதாரம். வேலை வாய்ப்பாக இருக்கட்டும். இதை தவிர பல்வேறு திட்டங்களை அரசு மக்களுக்காக நல்ல முறையில் செய்து வருகிறது.

தாங்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ள வேண்டும்.



இவ்வேலைவாய்ப்பு முகாமில் சென்னை, திருப்பூர், கோவை, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை உள்ளிட்ட ஊர்களிலிருந்து வந்த தனியார் நிறுவனங்களான TVR Enterprises, TVS Training and Services, Zencorp Techno Solutions, IIFM, TVS Locas, Sriram Enterptises Youth 4 Jobs போன்ற முன்னணி நிறுவனங்கள் உட்பட 109 தனியார்துறை நிறுவனங்கள் மற்றும் திறன் பயிற்சிஅளிக்கும் நிறுவனங்கள் ஆகியவை கலந்துகொண்டன. இம்முகாமில் 18 வயது முதல் 35 வரை உள்ள 8–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை படித்தோர். டிப்ளமோ, ஐடிஐ, பட்டதாரிகள், நர்சிங் மற்றும் பி.இ படித்த இளைஞர்கள், இளம் பெண்கள் என மொத்தம் 2949 க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்துகொண்டனர். கலந்துகொண்டவர்களில் (மாற்றுத்திறனாளிகள்) உட்பட 297 மேற்பட்ட நபர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட உள்ளது. 475 நபர்கள் இரண்டாம் கட்ட தேர்விற்கும், 137 நபர்கள் திறன் பயிற்சிக்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, இந்த மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் இன்று மிகச் சிறப்பாக நடைபெற்று கொண்டிருக்கின்றது. அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதில் முக்கியமான ஒன்றாக இந்த வேலைவாய்ப்பு முகாம் உள்ளது. அரசானது வேலை உருவாக்குதல், வேலை ஏற்படுத்துதல் என்ற முறையில் வேலை வாய்ப்பை உருவாக்கி தந்துள்ளது. தற்போது, புதிதாக தொழில் உருவாக்குதல் அதன் மூலம் வேலை வாய்ப்பை உருவாக்குதல், இதனால் தனியார் துறையும், அரசு துறையும் மாணவர்கள் மற்றும் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குதல். இது அரசின் சீரிய முயற்சி ஆகும். தமிழ்நாடு முழுவதும் 100 மெகா வேலை வாய்ப்பு முகாமை மிக தீவிரமாக செயல்படுகின்றன. நம் மாவட்டத்தில் இரு முகாமாக நடைபெற உள்ளது. அதில் முதல் கட்டம் இன்று நடைபெற்று கொண்டிருக்கின்றது. அரசின் முக்கிய பணியாக இதை செய்து வருகிறது. மாவட்ட தொழில் மையம் மூலம் பல்வேறு கடனுதவி வழங்கி வருகிறது. கடந்த ஆண்டு நம் மாவட்டம் மிகச் சிறந்த மாவட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதுபோலவே, இந்தாண்டும் மிகச்சிறப்பாக பணியாற்றி வருகிறோம். அந்த வகையில், வேலைவாய்ப்பை 300 பேருக்கு உருவாக்கி தந்துள்ளோம். இவ்வேலைவாய்ப்பு முகாமில் 109 கம்பெனி கலந்துள்ளன.

இதில் அனைவருக்கும் வேலை வாய்ப்பை வழங்கிடும் வகையில் இந்நிறுவனங்கள் உள்ளன. இதுபோன்ற பல்வேறு மெகா வேலை வாய்ப்பை அரசு ஏற்படுத்தி இருக்கிறது. அரசு முன் வந்து, வேலை தரும் நிறுவனங்களை அழைத்து பல்வேறு துறையை சார்ந்தவர்களுக்கும் வேலை வாய்ப்பை வழங்கி உள்ளது. ஆகவே, நாம் இதுபோன்று கிடைக்கும் வாய்ப்பினை பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மு. மணிமேகலை, மயிலாடுதுறை நகர்மன்ற தலைவர் செல்வராஜ், செம்பனார்கோயில் ஒன்றிய குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர், மயிலாடுதுறை ஒன்றியக் குழு தலைவர் மகேந்திரன் அவர்கள், மண்டல இணை இயக்குனர் சந்திரன் மற்றும் அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வடமதுரை ஊராட்சியைச் சேர்ந்த 3ஆயிரம் குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது



ஊத்துக்கோட்டை, செப்17–

குஹேனே நாகல் தனியார் நிறுவனமும், விருட்சம் பவுண்டேஷனும் இணைந்து திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், வடமதுரை ஊராட்சியில் ''கிராமப்புற வாழ்வாதார விவசாயிகள் மேம்பாட்டு திட்ட நிகழ்ச்சியை" நடத்தினர்.

எனவே, இந்த ஊராட்சியில் வசிக்கும் 3ஆயிரம் குடும்பங்களுக்கு தலா இரண்டு தென்னை மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி இந்த ஊராட்சியில் உள்ள பெருமாள் கோவில் வளாகத்தில் இன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, வடமதுரை ஊராட்சிமன்ற தலைவர் காயத்திரி கோதண்டன் தலைமை தாங்கினார். ஒன்றிய குழு உறுப்பினர் ஜமுனா அப்புன், துணைத்தலைவர் பாக்கியலட்சுமி ரமேஷ், மல்லியங்குப்பம் ராஜேஷ், சமூக சேவகர் பாகல்மேடு கண்ணன்,விஜயபிரசாத், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இதில்,ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி கர்னல் தியாகராஜன் கலந்து கொண்டு தென்னங்கன்றை பேணி பாதுகாத்தால் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும், விவசாயிகளின் வாழ்க்கை மேம்பட உறுதுணையாக இருக்கும் என்று கூறினார்.

இதன் பின்னர்,ஒரு குடும்பத்துக்கு இரண்டு தென்னங்கன்றுகள் வீதம் 3ஆயிரம் குடும்பங்களுக்கு 6,000 தென்னங்கன்றுகளை வழங்கும் நிகழ்ச்சியை குஹேனே நாகல் நிறுவனத்தின் தென்னிந்திய மண்டல தலைவர் சோஃபிப் பேர்லீன் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றி பேசினார்.

இதன் பின்னர்,பெருமாள் கோவில் வளாகம்,ஈஸ்வரன் கோவில் வளாகம் உள்ளிட்ட ஊராட்சியில் உள்ள பல்வேறு இடங்களில் மரக்கன்றுகளை நட்டனர். இந்நிகழ்ச்சியில்,என்.எஸ். ஜி கமாண்டோ வீரர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள்,பல்வேறு கட்சியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள்,பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில்,ஊராட்சி செயலர் கல்பனா விஜயகுமார் நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வடமதுரை ஊராட்சி மன்ற தலைவர்,துணைத் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# கொசு ஒழிப்புப் பணியை தீவிரப்படுத்த வேண்டும் டி.டி.வி. தினகரன்



சென்னை , செப். 17-

அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் வெளியிட்டுள்ள அறிக்கை.

தமிழ்நாட்டில் நடப்பாண்டில் 4048 பேருக்கும், செப்டம்பர் மாதத்தில் மட்டும் இதுவரை 300க்கும் அதிகமானோருக்கு டெங்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும், அதில் 3 பேர் உயிரிழந்திருப்பதாகவும் நாளிதழ்களில் வெளியாகி இருக்கும் செய்தி வேதனை அளிக்கக் கூடியதாக உள்ளது. டெங்கு காய்ச்சலை தடுக்க தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்படாத நிலையில், அதனை உருவாக்கும் ஏடிஸ் கொசுவை ஒழிப்பது தான் ஒரே வழி என்பதை உணர்ந்து கொசு ஒழிப்பு பணியை தமிழ்நாடு முழுவதும் அரசு தீவிரப்படுத்த வேண்டும்.

அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் காய்ச்சல் பாதிப்புடன் வருவோருக்கு டெங்கு பரிசோதனையை மேற்கொள்ள ஏதுவாக பரிசோதனை கருவிகளை அதிகரிக்க வேண்டும் எனவும் டெங்கு உறுதி செய்யப்படுவோருக்கு உயர்தர சிகிச்சை அளிக்கும் வகையில் தனி வார்டுகளை உருவாக்கிட வேண்டுமென தமிழ்நாடு அரசை கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் மருத்துவமனைகளில் நிலவும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பற்றாக்குறையை கணக்கெடுத்து காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்புவதோடு அனைத்து மருத்துவமனைகளிலும் 24மணி நேரமும் சுழற்சி அடிப்படையில் மருத்துவர்களும், செவிலியர்களும் பணியில் இருப்பதை அரசு உறுதிசெய்ய வேண்டும்.

மேலும் டெங்கு பாதிப்பில் இருந்து மக்களை மீட்க தமிழ்நாடு முழுவதும் காய்ச்சல் முகாம்கள் நடத்துவதோடு, டெங்கு தடுப்பு வழிமுறைகள் குறித்து பொதுமக்களிடையே போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனவும் தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறேன் என .டி. வி. தினகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# சங்கரன்கோவிலில் மாற்று திறனாளிகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம்



தென்காசி,செப்.17-

தென்காசி மாவட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு மருத்துவ முகாம் சங்கரன்கோவில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

மாற்று திறனாளிகள் நலத் துறையில் உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 5 மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் தலா 85 ஆயிரம் மதிப்பில் மொத்தம் நாலு லட்சத்து 25 ஆயிரம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் கீழ் இயற்கை மரணம் அடைந்த மாற்றுத்திறனாளிகளின் வாரிசுதாரர்களுக்கு தலா ரூ.17,000 மதிப்பில் காசோலைகள் மொத்தம் 68 ஆயிரம், ஆக மொத்தம் நாலு லட்சத்து 93 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் வழங்கினார்.

# திருப்பதி திருக்குடை ஊர்வலம் லட்சக்கணக்கான பக்தர்கள் வெண்பட்டு திருக்குடைகளுடன் தரிசனம் செய்து வருகின்றனர்



சென்னை, செப்,17

திருமலை திருப்பதி ஏழுமலையான் கோயிலில் புரட்டாசி மாதத்தில் நடக்கும் பிரம்மோற்சவத்தின்போது, ஏழுமலையான் கருட சேவைக்கு சென்னையில் இருந்து வெண்பட்டு திருக்குடைகள் காணிக்கையாக செலுத்துவது வழக்கம். அதன்படி, இந்த ஆண்டுக்கான திருப்பதி திருக்குடை ஊர்வலம், சென்னை சென்னகேசவ பெருமாள் கோயிலில் இருந்து நேற்று காலை புறப்பட்டது.

திருமலை திருப்பதியில் நடக்கும் பிரம்மோற்சவத்தின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான கருடசேவையின் போது, ஏழுமலையானுக்கு சாற்றுவதற்காக, தமிழக பக்தர்கள் சார்பில், 11 அழகிய வெண்பட்டு திருக்குடைகளை ஹிந்து தர்மார்த்த சமிதி ஆண்டுதோறும் சமர்ப்பணம் செய்கிறது.

தமிழகத்தில் இருந்து ஆண்டுதோறும் 2 மங்கலப்பொருட்கள் சமர்ப்பிக்கப்படும். அதில் ஒன்று ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்து ஆண்டாள் சூடிக்கொடுத்த மலர் மாலை. மற்றொன்று 250 ஆண்டுகளுக்கும் மேலாக, சென்னையில் இருந்து ஊர்வலமாகச் எடுத்துச் செல்லப்படும் ஏழுமலையான் கருடசேவைக்கான, வெண்பட்டு திருக்குடைகள். வைகுண்டத்தில் நாராயணனின் படுக்கையாக இருக்கும் ஆதிசேஷனே, பெருமாள் எழுந்தருளும்போது திருக்குடையாகிறார் என்பது ஐதீகம். அந்த அடிப்படையில், திருமலையில் எழுந்தருளியுள்ள ஏழுமலையானுக்கு பிரம்மோற்சவ கருடசேவையின்போது திருக்குடைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

சென்னையில் தொடங்கி திருமலை செல்லும் திருக்குடை ஊர்வலத்தை லட்சக்கணக்கான பக்தர்கள் குடும்பத்துடன் திரண்டு தரிசத்தனர். இந்த ஆண்டு ஹிந்து தர்மார்த்த ஸமிதி டிரஸ்ட், திருமலை திருப்பதி ஏழுமலையானுக்கு 11 அழகிய வெண்பட்டுத் திருக் குடைகளை, சென்னையில் இருந்து ஊர்வலமாக எடுத்து சென்று சமர்ப்பணம் செய்ய உள்ளது. சென்னை பூக்கடை சென்ன கேசவ பெருமாள் கோயிலில், நேற்று காலை சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு, திருக்குடைகள் ஊர்வலம் தொடங்கியது. ஊர்வலத்தை ரத்தினகிரி ஸ்ரீபாலமுருகன் திருக்கோயில் மவுனகுரு தவத்திரு பாலமுருகனடிமை ஸ்வாமிகள், கலவை கமலக்கண்ணியம்மன் திருக்கோயில் தவத்திரு சச்சிதானந்தா ஸ்வாமிகள் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

திருக்குடை ஊர்வலம், என்.எஸ்.சி. போஸ் சாலை, கோவிந்தப்ப நாயக்கன் தெரு சந்திப்பு, பைராகி மடம், வால்டாக்ஸ் சாலை வழியாக வந்து மாலை 4 மணிக்கு யானைகவுனியை தாண்டியது.

பின்னர், யானைக் கவுனி காவல் நிலையம், பேசின் பிரிட்ஜ், யானைக்கவுனி பிரிட்ஜ் ரோடு வழியாக திருக்குடை ஊர்வலம் சென்றது. தொடர்ந்து சென்னை அயனாவரம், வில்லிவாக்கம், திருமுல்லைவாயில், திருவள்ளூர் வரை திருக்குடைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

பின்னர், அங்கிருந்து திருமலையை சென்றடையும். வரும் 21ம் தேதி திருக்குடைகள் திருமலையை அடைந்ததும், ஏழுமலையான் கோயில் மாடவீதிகளில் ஊர்வலமாக எடுத்துச் சென்று, வேங்கடமுடையானுக்கான வஸ்திரம் உள்ளிட்ட மங்கலப் பொருட்களுடன் திருப்பதி ஜீயர்கள் முன்னிலையில், திருமலை திருப்பதி தேவஸ்தான அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்படும்.

# மகளிர் உரிமைத் திட்டம் அதிகாரிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி



சென்னை, செப். 17-

மகளிர் உரிமைத் திட்டத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பயனாளிகளைக் கண்டறிவதற்கு உதவியாக இருந்த அனைவருக்கும் நன்றி என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மிகக் குறுகிய காலத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பயனாளிகளைக் கண்டறிவதற்கு அயராது உழைத்திட்ட அனைவரையும் இத்தருணத்தில் பாராட்டி மகிழ்கிறேன். இத்திட்டத்தில் களப்பணியாற்றிய கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள், இல்லம் தேடிக் கல்வி திட்டத்தின் தன்னார்வலர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், நியாய விலைக் கடைப் பணியாளர்கள், நகராட்சி மாநகராட்சிப் பணியாளர்கள், தமிழ்நாடு தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அனைத்து அரசுத் துறை அலுவலர்களையும் இத்திட்ட நிகழ்வின் வெற்றியில் பாராட்டி மகிழ்கிறேன்.

களப்பணியாளர்களை வழிநடத்திய மாவட்ட ஆட்சியர்கள், அரசு செயலாளர்கள், தலைமைச் செயலாளர்கள் வரை உள்ள அனைத்து உயர் அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் என முதல்வர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

# காஷ்மீர் என்கவுண்டர் 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை பாதுகாப்புப்படையினர் அதிரடி



ஸ்ரீநகர் : செப்.17,

காஷ்மீரில் நடந்த என்கவுண்ட்டரில் 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் பாதுகாப்புப்படையினர் மற்றும் காஷ்மீர் போலீசார் இணைந்து பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டம் சர்வதேச எல்லைக்கட்டுப்பாட்டு பகுதி அருகே பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்புப்படையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, அந்த பகுதியில் பாதுகாப்புப்படையினர் நேற்று சோதனை நடத்தினர். பாரமுல்லாவின் உரி செக்டாரில் உள்ள ஹத்லங்கா பகுதியில் பாதுகாப்புப்படையினர் சோதனை செய்தபோது அங்கு பதுங்கி இருந்த பயங்கரவாதிகள் திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதையடுத்து, பாதுகாப்புப்படையினரும் பதிலடி துப்பாக்கிச்சூடு நடத்தினர். இரு தரப்பிற்கும் இடையே துப்பாக்கிச்சண்டை நடைபெற்ற நிலையில் பாதுகாப்புப்படையினரின் அதிரடி தாக்குதலில் 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். முன்னதாக, காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் கொகர்நக் கிராமத்தின் ஹடுல் வனப்பகுதியில் கடந்த செவ்வாய்கிழமை பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்புப்படையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இந்த தகவலின் அடிப்படையில் புதன்கிழமை அதிகாலை வனப்பகுதியில் பாதுகாப்புப்படையினர் அதிரடி சோதனை நடத்தினர். அப்போது, அங்கு பதுங்கி இருந்த பயங்கரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாதுகாப்புப்படையினரும் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இரு தரப்பிற்கும் இடையே 4வது நாளாக நேற்றும் துப்பாக்கிச்சண்டை நடைபெற்றது. இந்த மோதலில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 4 ராணுவ அதிகாரிகள் வீர மரணமடைந்தனர். அடர்ந்த வனப்பகுதி மற்றும் மலைப்பகுதி என்பதாலும், பயங்கரவாதிகள் மலை உச்சியில் பதுங்கி இருப்பதாலும் அனந்த்நாக் துப்பாக்கிச்சண்டை நேற்றும் நீடித்தது.

# ஜெ. கார் டிரைவரின் அண்ணன் மருத்துவமனையில் அனுமதி கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் கைதானவர்



சேலம், செப். 17-

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் கைதான ஜெயலலிதா கார் டிரைவரின் அண்ணனுக்கு நெஞ்சு எரிச்சல் ஏற்பட்டதால் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

கொடநாட்டில் உள்ள முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பங்களாவில் கடந்த 2017ம் ஆண்டு கொலை, கொள்ளை சம்பவம் நடந்தது. இதுதொடர்பாக கேரளாவை சேர்ந்த கூலிப்படையினர் 10 பேரை போலீசார் கைது செய்தனர். ஜெயலலிதாவுக்கு கார் டிரைவராக இருந்த கனகராஜ் இந்த கொள்ளை கும்பலுக்கு தலைவனாக இருந்து செயல்பட்டார். அவரை போலீசார் தேடி வந்த நிலையில் ஆத்தூர் அருகே நடந்த விபத்தில் சிக்கி மர்மமான முறையில் பலியானார். இந்த வழக்கில் அவரது அண்ணன் தனபால் ஆதாரங்களை அழித்ததாக கைது செய்யப்பட்டார்.

தற்போது, இந்த கொலை, கொள்ளை சம்பவத்திற்கு முக்கியமான காரணம் யார் என்பது குறித்து அவர் வெளிப்படையாக கூறி வருகிறார். இதையடுத்து கடந்த 14ம் தேதி கோவையில் சிபிசிஐடி முன்பு ஆஜராகி 8 மணி நேரம் சாட்சியளித்தார். அப்போது இந்த கொள்ளையை செய்ய சொன்னது யார்? யாரெல்லாம் உடந்தையாக இருக்கிறார்கள் என்பது பற்றிய தகவலை அவர் தெரிவித்தார். கொள்ளையடித்து கொண்டு வரப்பட்ட ஆவணங்கள் யாரிடம் கொடுக்கப்பட்டுள்ளது என்ற தகவலையும் தெரிவித்தார்.

கொள்ளையடித்த பிறகு கனகராஜும் கூலிப்படை கும்பலின் தலைவனான சயானும் சேலம் வந்தனர். அவர்கள் தன்னிடம் என்னெல்லாம் சொன்னார்கள் என்பது பற்றிய விவரத்தையும் தெரிவித்துள்ளார். இதையடுத்து அவரை மீண்டும் விசாரணைக்கு 26ம் தேதி சிபிசிஐடி போலீசார் அழைத்துள்ளனர். அதேபோல் நீதிபதியிடமும், தான் ரகசிய வாக்குமூலம் அளிக்க தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். அதற்கான ஏற்பாடுகளையும் சிபிசிஐடி போலீசார் செய்து வருகின்றனர். யாருடைய பெயரையெல்லாம் அவர் சொல்லி இருக்கிறாரோ அவர்களுக்கெல்லாம் சம்மன் அனுப்பி விசாரிக்கவும் சிபிசிஐடி போலீசார் தயாராகி வருகின்றனர்.

இந்நிலையில், சேலம் மாவட்டம் இடைப்பாடி அருகேயுள்ள சமுத்திரத்தில் உள்ள அவரது வீட்டில் தனபால் இருந்தபோது அவருக்கு திடீரென நெஞ்சு எரிச்சல் ஏற்பட்டது. ஏற்கனவே அவர் ஆஞ்சியோ சிகிச்சை செய்துள்ளார். மேலும் இதயத்தில் 2 அடைப்புகள் இருப்பதாகவும் இதுபோன்று நெஞ்சு எரிச்சல் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவமனைக்கு வரும்படியும் மருத்துவர்கள் தெரிவித்திருந்தனர். இதனால், நெஞ்சு எரிச்சல் ஏற்பட்டவுடன் இடைப்பாடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேல் சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் சேலம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

# உலகின் மிகப்பெரிய மாநாட்டு மையத்தை இன்று பிரதமர் மோடி திறந்து வைக்கிறார்

டெல்லி. செப். 17-

இந்தியாவின் தலைநகர் புதுடெல்லியில் உலகிலேயே மிகப்பெரிய சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சி மையம் (International Convention And Expo Centre) ஒன்றை இந்திய பிரதமர் நரேந்திர மோடி இன்று திறந்து வைக்கிறார்.

"யஷோபூமி" என பெயரிடப்பட்டுள்ள இம்மையம் "மைஸ்" எனப்படும் சந்திப்புகள், ஊக்கங்கள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் (Meetings, Incentives, Conferences, and Exhibitions) ஆகிய நோக்கங்களுக்கான மையமாக 8.9 லட்சம் சதுர மீட்டர் திட்ட மதிப்பீட்டில், 1.8 லட்சம் சதுர மீட்டர் கட்டிடப்பரப்பில் அமையவுள்ளது.

இதில் அமையவுள்ள மாநாட்டு மையம் 15 மாநாட்டு மையங்களை உள்ளடக்கி மொத்தமாக 73,000 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்படும். இதில் ஒரு முக்கிய கருத்தரங்க மண்டபமும், கலைநிகழ்ச்சிகளுக்கான மிகப்பெரிய அரங்கமும், 13 சந்திப்பு அறைகளும் என சுமார் 11 ஆயிரம் பிரதிநிதிகள் ஒரே நேரத்தில் பங்கேற்கும் வகையில் அமையவுள்ளது.

மைய கருத்தரங்க மண்டபம் சுமார் 6 ஆயிரம் விருந்தினர்கள் ஒன்றாக அமரும் வகையில் உள்ளது. கலைக்கூட அரங்கில் 2500 விருந்தினர்கள் அமரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு துறை சார்ந்த சந்திப்புக்களை நடத்தும் வகையில் 8 தளங்களில் 13 சந்திப்பு கூடங்கள் அமைக்கப்படுகிறது. 1.07 லட்சம் சதுர மீட்டர் பரப்பளவில் உலகிலேயே பெரிய கண்காட்சிக்கூடமும் அமையவுள்ளது. மழைநீர் சேகரிப்புக்கான வசதி, மறுசுழற்சி மூலம் கழிவுநீர் சுத்திகரிப்பு, சோலார் மின்சார வசதி என பசுமைவழி சார்ந்த முறைகளில் இயற்கையோடு இணைந்த வழியில் திட்டம் முழுவதும் கையாளப்பட்டுள்ளது.

புதுடெல்லியின் துவாரகா செக்டார் 21-ல் உள்ள டெல்லி ஏர்போர்ட் மெட்ரோ விரைவு ரெயில் நிலையத்தின் நீட்டிக்கப்பட்ட இணைப்பு வசதியை துவாரகா செக்டார் 25-ல் உருவாக்கப்பட்டுள்ள புது மெட்ரோ ரெயில் நிலையத்தையும் இன்று பிரதமர் மோடி திறந்து வைக்கிறார். இந்த புதுரெயில் நிலையம் வழியாக யஷோபூமி, டெல்லி விமான நிலைய மெட்ரோவுடன் இணைக்கப்படவுள்ளது. மெட்ரோ வழியாக புதுடெல்லியிலிருந்து யஷோபூமிக்கு செல்ல 21 நிமிடங்கள் மட்டுமே ஆகும் என கணக்கிடப்பட்டிருக்கிறது.

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை அமைச்சர் மெய்யநாதன் தொடங்கி வைத்தார்




செம்பனார்கோவில், செப்- 17:

தமிழ்நாடு முதலமைச்சர்மு க ஸ்டாலின் காஞ்சிபுரத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தை தொடங்கிவைத்தார். அதனைத் தொடர்ந்து, மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் கலைமகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிக்கு, மாவட்ட ஆட்சியர் திரு.ஏ.பி.மகாபாரதி தலைமை வகித்தார், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ராஜகுமார், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் உமா மகேஸ்வரி சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்து பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட வங்கி கணக்கு பற்று அட்டை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் பேசியதாவது:

தமிழக வரலாற்றில் இன்று பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய பொன்னான நாள். பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை பிரம்மாண்டமாக நாடு முழுவதும் கொண்டாடும் விதமாக, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பொருளாதார விடியலுக்காக ஒரு மிகச்சிறந்த திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள். 1 கோடியே 6 இலட்சம் மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் தொடங்கி வைத்துள்ளார். எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். மக்களை தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, கல்லூரியில் படிக்கும் மாணவிகளுக்கு மாதம் 1000 உதவித்தொகை, நான் முதல்வன் திட்டம், காலை உணவு திட்டம், மகளிர் சுய உதவிக்குழு கடன் போன்ற பல திட்டங்களை பெண்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார். இந்தியாவில் எந்த மாநிலமும் செய்யாத திட்டத்தை நம் முதல்வர் செய்துள்ளார்.

இந்த 2½ ஆண்டுகாலத்தில் தூங்காமல், கல்வியும் தந்து, துணிவுமிக்க தலைவராக உள்ளார். உதவித்தொகை அல்ல, உரிமைத்தொகை தந்துள்ளார். தமிழ்நாட்டில் 39 இலட்சத்து 40 ஆயிரம் பேர் முதியோர் உதவித்தொகை, அமைப்புசாரா தொழிலாளர் உதவித்தொகை என மாதம் ரூ.1200 வழங்கப்பட்டு வருகிறது. இதனால் நேரடியாக 1 கோடியே 45 இலட்சம் குடும்பங்கள் பயன்பெற்ற வருகின்றனர். ஆகவே, சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கும் அரசுக்கு நீங்கள் என்றும் உறுதுணையாக இருக்க வேண்டும் என அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த 07.07.2023 அன்று அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம் தொடர்பாக ஆலோசனைகளை நடத்தி, மிகவும் நேர்மையான முறையில் தகுதிவாய்ந்த குடும்பங்களுக்கு சென்றடையும் விதத்தில் பணிகள் இருக்க வேண்டுமென்று எங்களுக்கு உத்தரவிட்டார்கள். அதன்படி, நமது மாவட்டத்தில் கலைஞர் உரிமைத்திட்டம் விண்ணப்பங்கள் வழங்க இரு முகாம்கள் நடத்தி விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு, அவ்விண்ணப்பங்களை கள ஆய்வு செய்யப்பட்டது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் மொத்தம் 413 நியாயவிலைக் கடைகளில் 2,84,170 குடும்ப அட்டைகள் உள்ளன. முதல் கட்டமாக 211 இடங்களிலும், 2-ம் கட்டமாக 202 இடங்களிலும் 2,27,757 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. இன்றைய தினம் 9312 நபர்களுக்கு பற்று அட்டை வழங்கப்பட உள்ளது. பற்று அட்டையுடன் காகிதப் பையில் அரசின் தொகுப்பு புத்தகம் வழங்கப்பட உள்ளது. 2000 நபர்களுக்கு மேடையிலும், மீதமுள்ளவர்களுக்கு கிராம நிர்வாக அலுவலர் மூலம் வீடு வீடாகவும், மற்ற அரசு நிகழ்ச்சிகளிலும் வழங்க ஏற்பாடு செய்யப்பட உள்ளது. குறுஞ்செய்தி வராதவர்களுக்கு கடிதம்மூலம் அரசுக்கு பரிந்துரை செய்யலாம்.

டெக்னாலஜியை பயன்படுத்தி மிக சிறப்பாக நடைமுறைப்படுத்தக் கூடிய திட்டமாக இத்திட்டம் உள்ளது. புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம் என பல திட்டத்தை தமிழ்நாடு அரசானது செயல்படுத்தி வருகிறது. பெண்கள் முன்னேற்றத்திற்காக இதுபோன்ற அரசின் பல திட்டங்களை பயன்படுத்தி நீங்கள் வாழ்வில் மேம்பட உயர வேண்டும். இதன்மூலம், சமுதாயமும், நாடும் முன்னேற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மு. மணிமேகலை, மயிலாடுதுறை ஒன்றியக் குழுத் தலைவர் காமாட்சி மூர்த்தி, செம்பனார்கோயில் ஒன்றியக்குழுத் தலைவர் நந்தினி ஸ்ரீதர், தரங்கம்பாடி பேரூராட்சித் தலைவர் சுகுண சங்கரி, மணல்மேடு பேரூராட்சித் தலைவர் கண்மணி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### காஷ்மீர் விவகாரம் உள்பட அனைத்து வழக்குகளிலும்

# சாமானிய மக்களின் குரலை உச்சநீதிமன்றம் கேட்கும் தலைமை நீதிபதி சந்திரசூட் கருத்து



டெல்லி, செப். 17-

காஷ்மீர் விவகாரம் உள்பட அனைத்து வழக்குகளிலும் சாமானிய மக்களின் குரலை உச்சநீதிமன்றம் கேட்பதாக தலைமை நீதிபதி சந்திரசூட் தெரிவித்துள்ளார்.

சிறு, குறு நிறுவனங்கள் தொடர்பாக வழக்கறிஞர் மாத்யூஸ் நெடும்பரா தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் அண்மையில் தள்ளுபடி செய்தது. இதையடுத்து தலைமை நீதிபதிக்கு அனுப்பி இருக்கும் கடிதத்தில் அரசியல் சாசனம் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு மட்டுமே உச்சநீதிமன்றம் முக்கியத்துவம் அளிப்பதாகவும், பொதுநலன் குறித்த வழக்குகளையோ சாமானிய மக்களின் குரலையே கேட்பதில்லை என்று தெரிவித்திருந்தார்.

இதற்குபதில் அளித்துள்ள தலைமை நீதிபதி சந்திரசூட் காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் பிரிவு 370 ரத்து செய்யப்பட்டது தொடர்பான வழக்கை தொடர்ந்து 16 நாட்கள் விசாரித்ததாகவும், காஷ்மீரில் வசிக்கும் தனி மனிதர்களின் கோரிக்கைகளும் கேட்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். அதேபோல இலகு ரக வாகன ஓட்டுவதற்கான உரிமம் பெற்றவர்கள் கனரக வாகனங்களை ஓட்டலாம் என்ற ஒன்றிய அரசின் புதிய உத்தரவால் நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான ஓட்டுனர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்பதை கருத்தில் கொண்ட உச்சநீதிமன்றம் இந்த வழக்கை அரசியல் சாசன அமர்வு விசாரிக்க பரிந்துரை செய்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே பரபரப்பு வழக்குகளை மட்டுமே அரசியல் சாசன அமர்வு விசாரிக்கும் என்பதும், சாதாரண மக்களின் குரலை உச்சநீதிமன்றம் கேட்பதில்லை என்ற கருத்தும் தவறானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் சிறு, குறு நிறுவனங்கள் தொடர்பான வழக்கில் உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்யாமல் நேரடியாக உச்சநீதிமன்றத்தை நாடியதால் தான் அந்த வழக்கை விசாரிக்கவில்லை என்றும் சந்திரசூட் விளக்கம் அளித்துள்ளார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# விளையாட்டு செய்திகள்

## ஒருநாள் கிரிக்கெட்டில் புதிய மைல்கல்லை எட்டிய ரவீந்திர ஜடேஜா



**கொழும்பு : செப். 17,**

**ஆசிய கோப்பை தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிகிழமை நடைபெற்ற வங்காளதேசத்துக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணி தோல்வி அடைந்தது.**

இந்திய கிரிக்கெட் அணி தற்போது ஆசிய கோப்பை தொடரில் (50 ஓவர்) விளையாடி வருகிறது. இதில் நேற்று முன்தினம் வெள்ளிகிழமை நடைபெற்ற சூப்பர் 4 சுற்றின் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா - வங்காளதேசம் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் ஆடிய வங்காளதேசம் அணி 50 ஓவர்களில் 265 ரன்கள் எடுத்தது.

இதையடுத்து 266 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய இந்திய அணி 49.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 259 ரன்களே எடுத்து 6 ரன் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. இந்த ஆட்டத்தில் தோல்வி அடைந்தாலும் இந்திய அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. இன்று நடைபெறும் இறுதிப்போட்டியில் இந்தியா - இலங்கை அணிகள் மோத உள்ளன.

இந்நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிகிழமை நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய ஆல் ரவுண்டர் ரவீந்திர ஜடேஜா 10 ஓவர்கள் பந்து வீசி 53 ரன்கள் விட்டுக்கொடுத்து 1 விக்கெட் வீழ்த்தினார். இதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட்டில் ஜடேஜா புதிய மைல்கல்லை எட்டியுள்ளார். அதாவது ஒருநாள் கிரிக்கெட்டில் 200 விக்கெட் வீழ்த்தியவர்கள் பட்டியலில் ஜடேஜா 7வது வீரராக இணைந்துள்ளார்.

முதல் ஆறு இடங்களில் அனில் கும்ப்ளே 334 விக்கெட், ஜவஹல் ஸ்ரீநாத் 315 விக்கெட், அஜித் அகர்கர் 288 விக்கெட், ஜாகீர் கான் 269 விக்கெட், ஹர்பஜன் சிங் 265 விக்கெட், கபில் தேவ் 253 விக்கெட் எடுத்து உள்ளனர். இந்த வரிசையில் ஜடேஜா 7வது வீரராக (200 விக்கெட்) இணைந்தார்.

## தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் போட்டி டிராவிஸ் ஹெட் காயம், உலகக்கோப்பை தொடரில் பங்கேற்பாரா



**கேப்டவுன் : செப். 17,**

**தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக நேற்று முன்தினம் வெள்ளிகிழமை நடைபெற்ற ஆட்டத்தில் பந்து தாக்கியதில் டிராவிஸ் ஹெட்டின் இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.**

தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 4-வது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் வெள்ளிகிழமை நடைபெற்றது. டாஸ் வென்ற ஆஸ்திரேலியா பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் பேட்டிங் ஆடிய தென் ஆப்பிரிக்கா 50 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 416 ரன்கள் குவித்தது.

ஹென்ரிச் கிளாசென் 83 பந்துகளில் 13 பவுண்டரி, 13 சிக்சர் உள்பட 174 ரன்கள் அடித்து ஆட்டமிழந்தார். டேவிட் மில்லர் 45 பந்துகளில் 6 பவுண்டரி, 5 சிக்சர் உள்பட 82 ரன்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். வான்டெர் டுசன் அரை சதமடித்து 62 ரன்னில் அவுட்டானார்.

இதையடுத்து 417 ரன் என்ற இமாலய இலக்கை நோக்கி ஆடிய ஆஸ்திரேலியா 34.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 252 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் தென் ஆப்பிரிக்கா அணி 164 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியின் தொடக்க ஆட்டக்காரராக களம் இறங்கிய டிராவிஸ் ஹெட், ஜெரால்ட் கோட்ஸியின் பந்து வீச்சில் இடது கையில் பலத்த காயம் அடைந்தார். இதையடுத்து அவர் ரிட்டையர் அவுட் மூலம் வெளியேறினார். அதன் பின்னர் டிராவிஸ் ஹெட்டுக்கு இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாக ஆஸ்திரேலிய தலைமை பயிற்சியாளர் ஆண்ட்ரூ மெக்டொனால்ட் உறுதிப்படுத்தினார்.

உலகக்கோப்பை தொடர் தொடங்குவதற்கு இன்னும் சுமார் 20 நாட்களே உள்ள நிலையில் டிராவிஸ் ஹெட் காயம் அடைந்துள்ளதால் அவர் உலகக்கோப்பை தொடரில் பங்கேற்பாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஒருவேளை டிராவிஸ் ஹெட் உலகக்கோப்பை தொடரில் பங்கேற்கவில்லை என்றால் அவருக்கு பதிலாக மார்னஸ் லாபுசாக்னேவுக்கு வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இதைவிட சிறந்த வகையில் அணியை அறிவிக்க முடியாது

### அனைவரையும் ஈர்த்த நியூசிலாந்து



**நியூசிலாந்து : செப். 17,**

**இந்தியாவில் அடுத்த மாதம் 5-ந் தேதி (அக்டோபர்) உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் தொடங்குகிறது. நவம்பர் 19-ந் தேதி வரை தொடர்ந்து நடைபெற இருக்கிறது.**

இத்தொடரில் பங்கேற்கும் ஒவ்வொரு அணிகளும், தங்களது வீரர்கள் பட்டியலை வெளியிட்டு வருகிறது. பொதுவாக வீரர்கள் அறிவிப்பு டுவிட்டர் மூலம் அறிவிக்கப்படும். அல்லது பத்திரிகையாளர் அழைக்கப்பட்டு அவர்கள் முன்னிலையில் கிரிக்கெட் போர்டால் அறிவிக்கப்படும். ஆனால், நியூசிலாந்து கிரிக்கெட் போர்டு, தங்களது அணி வீரர்கள் அறிவிப்பை வித்தியாசமான முறையில் வெளியிட்டுள்ளது. அவர்கள் சிறந்த ரசிகர்களால் அறிவிக்க வைத்துள்ளனர். ஒரு கிரிக்கெட் வீரருக்கு அவரது குடும்பத்தினர்தான் முதல் ரசிகர் என்றால் அது மிகையாகாது.

அந்தவகையில்திருமணம் முடிந்து குழந்தைகள் உள்ள வீரர்கள் அவர்களும் குழந்தைகளின் மழலை குரல்களிலும், மனைவி மட்டும் இருப்பவர்கள் மனைவி மூலமாகவும், காதலி இருப்பவர்கள் அவர்கள் மூலமாகவும், மனைவி மற்றும் காதலி இல்லாத வீரர்கள் அவர்களின் பெற்றோர் மூலமாகவும்அறிவிக்கப்பட்டனர். இது தொடர்பான வீடியோ வைரலாகி வருகிறது.

## உலகக்கோப்பையை வெல்ல இந்த இரு அணிகளுக்கே அதிக வாய்ப்பு குமார் சங்கக்காரா



**கொழும்பு : செப். 17,**

**இந்தியாவில் அடுத்த மாதம் 5ம் தேதி 50 ஓவர் உலகக்கோப்பை தொடர் தொடங்குகிறது.**

இந்தியாவில் அடுத்த மாதம் 50 ஓவர் உலகக்கோப்பை தொடர் நடைபெற உள்ளது. இந்த தொடரில் இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து உள்ளிட்ட 10 அணிகள் கலந்து கொள்கின்றன. இந்த தொடரின் தொடக்க ஆட்டத்தில் இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் அகமதாபாத்தில் மோத உள்ளன.

இந்திய அணி தனது தொடக்க ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை சென்னையில் சந்திக்கிறது. உலகக்கோப்பை தொடருக்கு இன்னும் சுமார் 20நாட்களே உள்ள நிலையில் பல முன்னாள் வீரர்கள் உலகக்கோப்பை தொடரில் சாம்பியன் பட்டம் வெல்லும் அணி, அரையிறுதிக்கு முன்னேறும் அணிகள் உள்ளிட்டவை குறித்து தங்களது கருத்துகளை தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் இந்த உலகக்கோப்பை தொடரில் சாம்பியன் பட்டம் வெல்ல தகுதியுள்ள இரு அணிகள் எவை என்பவை குறித்து இலங்கை முன்னாள் கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்காரா தனது கருத்தை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது : இந்திய அணி இந்த உலகக்கோப்பை தொடரை கைப்பற்ற அதிக வாய்ப்புள்ளதாக கருதுகிறேன். ஏனெனில் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அவர்கள் தொடர்ச்சியான சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். அதோடு தற்போது நடைபெற்று வரும் ஆசிய கோப்பை தொடரிலும் இந்திய அணியினர் சிறப்பாக செயல்பட்டு வருவதால் உலகக்கோப்பை தொடரிலும் சாதிக்க அதிக வாய்ப்பு உள்ளது. தற்போதுள்ள இந்திய அணி அனுபவம் வாய்ந்த வீரர்கள் மற்றும் இளம் வீரர்கள் என சரியான கலவையில் அமைந்துள்ளதால் சொந்த மைதானத்தில் கோப்பையை கைப்பற்ற இந்திய அணிக்கு அதிக வாய்ப்பு உள்ளது.

இந்திய அணியை அடுத்து இங்கிலாந்து அணிக்கு அதிகப்படியான வாய்ப்பு இருக்கிறது. ஏனென்றால் ஒருநாள் கிரிக்கெட்டில் இங்கிலாந்து அணியினர் தொடர்ச்சியான அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திவருகின்றனர். சமீபத்திய தொடர்களில் கூட மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் இங்கிலாந்து அடுத்தடுத்து வெற்றிகளை பெற்று வரும் வேளையில் இந்தியாவில் நடக்கும் இந்த உலகக்கோப்பை தொடரிலும் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி சாம்பியன் பட்டத்தை வெல்ல அதிக வாய்ப்பு உள்ளது என குமார் சங்கக்காரா கூறினார்.

## தேசிய வலுதூக்குதல் போட்டி தமிழக அணிக்கு 2 பதக்கம்



**ஜாம்ஷெட்பூர் : செப். 17,**

**இந்திய வலுதூக்குதல் சம்மேளனம் சார்பில் தேசிய சீனியர், சப்-ஜூனியர் வலுதூக்குதல் போட்டி ஜாம்ஷெட்பூரில் 3 தினங்கள் நடைபெற்றது.**

ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் நடைபெற்றஇந்தபோட்டியில் நாடு முழுவதும் இருந்து வீரர் - வீராங்கனைகள் பங்கேற்றனர். இதில் தமிழக அணிக்கு 2 பதக்கம் கிடைத்தது. சப்-ஜூனியர் 59 கிலோ பிரிவில் சென்னையை சேர்ந்த அபிஷேக் பால்ஜோஸ்வா தங்கம் வென்றார். சீனியர் 59 கிலோ பிரிவில் நந்தகோபால் வெண்கல பதக்கம் பெற்றார்.

பதக்கம் வென்ற இருவரையும் தமிழ்நாடு வலுதூக்குதல் சங்க பொதுச் செயலாளர் இளங்கோவன், சென்னை மாவட்ட வலுதூக்குதல் சங்க செயல் தலைவர் விஜயபாஸ்கர் ஆகியோர் பாராட்டினார்கள்.

## மெஸ்ஸி, நெய்மார் இல்லாததால் தடுமாறும் பிஎஸ்ஜி அணி எம்பாப்பே 2 கோல் அடித்தும் நைஸ் அணியிடம் தோல்வி



**பாரிஸ் : செப். 17,**

**முதன்மை கால்பந்து தொடரான லீக்-1 பிரான்ஸ் நாட்டில் நடைபெற்று வருகிறது.**

பிரான்ஸ் நாட்டில் முதன்மை கால்பந்து தொடரான லீக்-1 நடைபெற்று வருகிறது. இதில் முன்னணி அணியாக திகழும் பிஎஸ்ஜி அணியில் இருந்து முன்னணி வீரர்கள் மெஸ்ஸி, நெய்மார் வெளியேறினர். இந்த நிலையில் நட்சத்திர வீரர் எம்பாப்பே இந்த அணிக்காக விளையாடி வருகிறார்.

நேற்று காலை நடைபெற்ற ஆட்டத்தில் பிஎஸ்ஜி அணி நைஸ் அணியுடன் மோதியது. பரபரப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் 2-3 என்ற கோல் கணக்கில் நைஸ் அணியிடம் பிஎஸ்ஜி அணி தோல்வியை தழுவியது.

ஆட்டம் தொடங்கிய 21-வது நிமிடத்தில் நைஸ் அணியின் சார்பாக டெரெம் மொப்பி முதல் கோல் அடித்தார். அதன் பின்பு 29-வது நிமிடத்தில் எம்பாப்பே பிஎஸ்ஜி அணிக்காக பதில் கோலை பதிவு செய்தார். ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணிகளும் 1-1 என்ற கணக்கில் சமனில் இருந்தன.

ஆட்டத்தின் 2-வது பாதியில் நைஸ் வீரர்கள் அபாரமாக விளையாடினர். 53-வது நிமிடத்தில் கயேடன் லபோர்டேவும், 68-வது நிமிடத்தில் மொப்பியும் தலா ஒரு கோல் அடித்ததன் மூலம் 3-1 என்ற கணக்கில் நைஸ் அணி முன்னிலை பெற்றது.

பின்னர் 87-வதுநிமிடத்தில் எம்பாப்பே மீண்டும் ஒரு கோல் அடித்தார். அதன்பிறகு எவ்வளவோ முயற்சித்தும் பிஎஸ்ஜி அணியால் கோல் அடிக்க முடியவில்லை. இதன் காரணமாக பிஎஸ்ஜி அணி 2-3 என்ற கோல் கணக்கில் நைஸ் அணியிடம் தோல்வியை தழுவியது. இந்த தோல்வியால் லீக்-1 புள்ளி பட்டியலில் பிஎஸ்ஜி அணி 3-வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. மொனாக்கோ முதல் இடத்திலும், நைஸ் அணி 2-வது இடத்திலும் உள்ளன.

## ஏ.வி.எம் அருங்காட்சியத்தில் இடம்பெற்ற அஜித் பைக்



**சென்னை : செப். 17,**

**தென்னிந்திய சினிமாவில் புகழ்மிக்க தயாரிப்பு நிறுவனமாக இருந்து வருவது ஏ.வி.எம் புரொடக்ஷன்ஸ்.**

தமிழ், தெலுங்கு, இந்தி மொழிகளில் 300 படங்களுக்கு மேல் தயாரித்துள்ள இந்த நிறுவனம் சிவாஜி கணேசன், கமல்ஹாசன் என முன்னணி நடிகர்கள் பலரை திரையுலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

சென்னை, வடபழனியில் அமைந்துள்ள இந்த நிறுவனத்தின் ஸ்டுடியோவில் 'ஏ.வி.எம். ஹெரிடேஜ் மியூசியம்' உருவாக்கப்பட்டுள்ளது. இதில், பழைய மற்றும் காலத்திற்கு ஏற்ப மாறிய திரைப்பட தயாரிப்பு தொழில்நுட்ப கருவிகளையும், மிகப் பழமையான பாரம்பரியமிக்க, கார்கள் மற்றும் இருசக்கர வாகனங்களையும் காட்சிக்காக வைத்துள்ளனர்.

இந்நிலையில், தற்போது இந்த மியூசியத்தில் நடிகர் அஜித்தின் பைக் இடம்பெற்றுள்ளது. அதாவது, 'திருப்பதி' படத்தில் அஜித் பயன்படுத்திய (பஜாஜ் பல்சர் 180சிசி 2004) பைக்கை மியூசியத்தில் இணைத்துள்ளதாக ஏ.வி.எம். புரொடக்ஷன்ஸ் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளது. திருப்பதி படத்தை ஏ.வி.எம் புரொடக்ஷன் தயாரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## சாக்ஷி அகர்வாலின் திரில்லர் கதை



**சென்னை : செப். 17,**

**அபி சரவணன் நாயகனாகவும், சாக்ஷி அகர்வால் நாயகியாகவும் நடிக்கும் படம் 'சாரா'.**

இதில் யோகிபாபுவும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். திரில்லர் படமாக உருவாகிறது. ரஜித் கண்ணா டைரக்டு செய்கிறார். இவர் ஏற்கனவே தொலைக்காட்சி தொடர் மற்றும் குறும்படங்களை இயக்கி 'வெள்ளை' என்ற படம் மூலம் டைரக்டராக அறிமுகமானார்.

சாரா படம் பற்றி அவர் கூறும்போது, "ஒரு தாயை நேசிக்கும் மகனின் கதையில் இன்றைய நவீன உலக நட்பையும், காதலையும் பேசும் அழுத்தமான களத்தில் பரபரப்பான திரைக்கதையுடன் ஒரு முழுமையான திரில்லர் அனுபவம் தரும் திரைப்படமாக உருவாகவுள்ளது" என்றார். இசை: கார்த்திக் ராஜா, ஒளிப்பதிவு: ஜே.லட்சுமண். தமிழில் பல படங்களை வினியோகம் செய்த ஷ்வா டிரீம் வேல்டு பட நிறுவனம் தயாரிக்கிறது. படத்தில் நடிக்கும் இதர நடிகர் நடிகைகள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் விரைவில் அறிவிக்கப்பட உள்ளனர்.

## ரூ.15 கோடி போச்சே பாட்டு லீக் ஆனதால் அப்செட் ஆன ஷங்கர்



**சென்னை : செப். 17,**

**தமிழ் திரையுலகின் முன்னணி இயக்குனரான ஷங்கர் இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் 'கேம் சேஞ்சர்'.**

ராம்சரண் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தில் கியாரா அத்வானி கதாநாயகியாக நடிக்கிறார். மேலும், எஸ். ஜே.சூர்யா, அஞ்சலி, ஸ்ரீகாந்த், சமுத்திரக்கனி, உட்பட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர்.

ஸ்ரீ வெங்கடேஸ்வரா கிரியேஷன்ஸ் சார்பில் தில் ராஜு தயாரிக்கும் இப்படத்திற்கு தமன் இசையமைக்கிறார். இப்படத்தின் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்தப் படத்தின் பாடல் காட்சிகளுக்காக மட்டும் ரூ.90 கோடி செலவழிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், 'கேம் சேஞ்சர்' திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள 'ஜாபிலம்மா' என்ற பாடல் ரிலீஸாகுவதற்கு முன்பே சமூக வலைதளத்தில் லீக்காகியுள்ளது. ரூ.15 கோடி பட்ஜெட்டில் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் இந்த பாடல் லீக்கானதால் படக்குழு அதிர்ச்சியில் உள்ளது. மேலும், இந்த பாடலை சமூக வலைதளத்தில் இருந்து நீக்கும் பணியில் படக்குழு ஈடுபட்டுள்ளது.

## படம் இயக்க 18 வருடங்கள் போராடினேன் மனோஜ் கண்ணீர்



**சென்னை : செப். 17,**

**இயக்குனர் சுசீந்திரனின் வெண்ணிலா புரொடக்ஷன்ஸ் தயாரிக்க, பாரதிராஜாவின் மகனும், நடிகருமான மனோஜ் இயக்குனராக அறிமுகமாகும் படம், 'மார்கழி திங்கள்'.**

இளையராஜா இசை அமைத்துள்ளார். புதுமுகங்கள் ஷியாம் செல்வன், ரக்ஷணா, நக்ஷா சரண் ஆகியோருடன் முக்கிய வேடத்தில் பாரதிராஜா நடித்துள்ளார். இப்படத்தின் டிரைலர் மற்றும் இசை வெளியீட்டு விழாவில் கார்த்தி, சிவகுமார், சீமான், ஆர்.கே.செல்வமணி, ஆர்.வி.உதயகுமார், லிங்குசாமி, ஜி.தனஞ்செயன், சுரேஷ் காமாட்சி, பேரரசு மற்றும் படக்குழுவினர் கலந்துகொண்டனர்.

அப்போது மேடையில் பேசியமனோஜ்கண்ணீர்விட்டு அழுதார். அவர் கூறியதாவது: படம்இயக்கவேண்டும்என்பது என் விருப்பமாக இருந்தது. என் தந்தை பாரதிராஜா, 'நான் சினிமாவில் நடிக்கவே சென்னைக்கு வந்தேன். அது நிறைவேறவில்லை. இயக்குனராகி விட்டேன். நீயாவது என் ஆசையை நிறைவேற்று' என்று சொல்லி, என் பாதையை மாற்றி, அவர் இயக்கிய 'தாஜ்மஹால்' படத்தில் என்னை ஹீரோவாக அறிமுகப்படுத்தினார்.

தொடர்ந்து பல படங்களில் நடித்தும் எனக்கான இடத்தை அடைய முடியவில்லை. இப்படியே 18 வருடங்களாக கடுமையாகப் போராடி, இப்போதுதான் இயக்குனராகி இருக்கிறேன். இத்தனை வருடங்களாக எனது கஷ்டங்களில் பங்கெடுத்து, சோர்ந்து போன நேரங்களில் எல்லாம் எனக்கு உற்சாகமூட்டிய மனைவி மற்றும் எனது மகள்கள், அம்மாவுக்கு நன்றி. இவ்வாறு அவர் பேசும்போது கண்ணீர் விட்டு அழுதார்,

# சினிமா செய்திகள்

## உதவி இயக்குனர்களுக்கு லேப்டாப் பரிசளித்த பி.வாசு




சென்னை : செப். 17, தமிழ் திரையுலகில் முன்னணி இயக்குனரான பி.வாசு நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி 60-க்கும் மேற்பட்ட வெற்றி படங்களை கொடுத்துள்ளார்.

இவர் தற்போது 'சந்திரமுகி-2' திரைப்படத்தை இயக்கியுள்ளார். இப்படத்தில் ராகவா லாரன்ஸ் கதாநாயகனாக நடித்துள்ளார். கங்கனா ரனாவத் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் வடிவேலு, ராதிகா உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் இதில் நடித்திருக்கின்றனர்.

லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு எம்.எம் கீரவாணி இசையமைத்துள்ளார். 'சந்திரமுகி 2' திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் வருகிற 28-ஆம் தேதி வெளியாகவுள்ளது. இதைத்தொடர்ந்து இப்படத்தின் புரொமோஷன் பணிகளில் படக்குழு ஈடுப்பட்டுள்ளது.

இயக்குனர் பி.வாசு தனது பிறந்த நாளை படக்குழுவினருடன் கேக் வெட்டி கொண்டாடியுள்ளார். இந்த நிகழ்ச்சியின் போது இயக்குனர் பி.வாசு தன்னுடைய உதவியாளர்களுக்கு லேப்டாப்களை பரிசாக வழங்கினார். இந்த கொண்டாட்டத்தில் ஜி. கே. எம். தமிழ் குமரன் மற்றும் ராகவா லாரன்ஸ் இருந்தது குறிப்பிடத்தக்கது.

▶ **ஐதராபாத்: செப்.17, மூன்று வருட இடைவெளிக்குப் பிறகு அனுஷ்கா நடிப்பில் திரைக்கு வந்துள்ள படம், 'மிஸ் ஷெட்டி மிஸ்டர் பொலிஷெட்டி'**. இதில் நவீன் பொலிஷெட்டி ஹீரோவாக நடித்துள்ளார். பி.மகேஷ் பாபு இயக்கியுள்ளார். கடந்த 7ம் தேதி வெளியான இப்படம் தமிழிலும் டப்பிங் செய்து வெளியிடப்பட்டது. ரசிகர்கள் மத்தியில் வரவேற்பு பெற்றுள்ள இப்படம், பெண்களுக்கு மட்டும் சிறப்புக் காட்சியாக வெளியிடப்பட்டது. ஆந்திரா மற்றும் தெலங்கானாவில் இருக்கும் 20 தியேட்டர்களில் நடந்த காலைக்காட்சி, பெண்களுக்கு மட்டும் திரையிடப்பட்டது. இத்தகவலை அனுஷ்கா தெரிவித்துள்ளார்.



# உலக செய்திகள்

## கனடா வர்த்தகத்துறை மந்திரியின் இந்திய பயணம் ஒத்திவைப்பு இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் விரிசல்



**ஒட்டோவா : செப். 17,**

**இந்தியா - கனடா இடையேயான உறவில் விரிசல் அதிகரித்து வருகிறது.**

டெல்லியில் கடந்த 9 மற்றும் 10ம் தேதிகளில் நடந்த ஜி20 உச்சிமாநாட்டில் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர். இந்த மாநாட்டில் பங்கேற்க கனடா பிரதமர் ஜெஸ்டின் ட்ரூடோவும் வந்திருந்தார். ஆனால், அவர் 10ம் தேதி நடந்த உச்சிமாநாட்டில் பங்கேற்கவில்லை.

அதேவேளை, ஜி20 உச்சிமாநாட்டின்போதுஇந்திய பிரதமர் மோடி மற்றும் கனடா பிரதமர் ட்ரூடோ இடையே இரு தரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது. அப்போது, கனடாவில் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாகவும், காலிஸ்தான் ஆதரவு அமைப்புகள் கனடாவில் உள்ள இந்து மத வழிபாட்டு தலங்கள் மீது தாக்குதல் நடத்துவதாகவும், இந்திய தூதரக அதிகாரிகளுக்கு மிரட்டல்கள் வருவதாகவும் இது தொடர்பாக கனடா அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ட்ரூடோவிடம் மோடி வலியுறுத்தினார். காலிஸ்தான் விவகாரத்தில் கனடாவுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்ததாகவும் தகவல் வெளியாகியது.

இதனை தொடர்ந்து ஜி20 மாநாட்டை நிறைவு செய்த பின் பிற நாடுகளின் தலைவர்கள் சொந்த நாடு சென்ற நிலையில் விமான கோளாறு காரணமாக ட்ரூடோ கனடா செல்வதில் கால தாமதம் ஏற்பட்டது. திட்டமிட்ட காலத்தை கடந்து அவர் 2 நாட்கள் கழித்து இந்தியாவில் இருந்து புறப்பட்டார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனால் இந்தியா - கனடா இடையேயான உறவில் விரிசல் அதிகரித்து வந்தது.

இந்நிலையில், கனடா வர்த்தகத்துறை மந்திரியின் இந்திய வருகை தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இரு நாட்டிற்கு இடையேயான வர்த்தகத்தை மேம்படுத்த அடுத்த மாதம் கனடா வர்த்தகத்துறை மந்திரி மெரி நக் இந்தியா வர திட்டமிட்டிருந்தார்.

ஆனால், ஜி20 மாநாட்டின் போது கனடா பிரதமர் ட்ரூடோ இந்தியாவால் புறக்கணிக்கப் பட்டதையடுத்து கனடா வர்த்தகத்துறை மந்திரி மெரியின் இந்திய பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஆனால், மெரியின் இந்திய பயணம் ஒத்திவைக்கப்பட்டதற்கான காரணத்தை கனடா அரசு இதுவரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ரஷியாவில் அணுஆயுதங்கள் சுமந்து செல்லும் விமானங்களை ஆய்வு செய்த கிம் ஜாங் உன்



**ரஷியா : செப். 17,**

**வடகொரியா அதிபர் கிம் ஜாங் உன் ரஷியாவில் சுற்றுப் பயணம் செய்து வருகிறார்.**

அங்கு சென்றுள்ள அவர் ரஷிய அதிபர் புதினை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது ரஷியாவிற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

அதன் பிறகு ரஷியாவின் ஆயுத தொழிற்சாலைகளுக்கு சென்று, ஆயுதங்களை பார்வையிட்டு வருகிறார். ஏற்கனவே கிம் ஜாங் உன் பயணம் குறித்து தென்கொரியா கவலை தெரிவித்திருந்தது. ஆயுதங்கள் தயாரிப்பதற்கான தொழில்நுட்பத்தை ரஷியா வழங்கக்கூடும் எனத் தெரிவித்திருந்தது. இந்த நிலையில் ரஷியாவின் கிழக்குப்பகுதியில் தொடர்ந்து சுற்றுப் பயணத்தில் இருக்கும் கிம் ஜாங் உன், நேற்று விளாடிவோஸ்டோக்கில் அணுஆயுதங்களை சுமந்து செல்லும் விமானங்களை ஆய்வு செய்துள்ளார்.

உக்ரைனுக்கு எதிரான போரில் பயன்படுத்தப்படும் Tu-160, Tu-95, Tu-22 ஆகிய விமானங்களையும் பார்வையிட்டு ஆய்வு செய்துள்ளார். இந்த விமானங்கள் தற்போது உக்ரைன் மீது ஏவுகணைகளை வீச பயன்படுத்தப்படுகிறது. புதின்- கிம் ஜாங் உன் கடந்த புதன்கிழமை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த சந்திப்பின்போது, ரஷியாவிற்கு வடகொரியா ஆயுதங்கள் வழங்குவதற்குப் பதிலாக, ரஷியாவின் தொழில்நுட்பத்தை பயன்படுத்திக் கொள்ள வடகொரியா ரஷியாவிடம் கேட்பது தொடர்பான ஒப்பந்தம் போடப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது.

அடுத்ததாக ரஷியாவின் கப்பற்படைக்கு சென்று கிம் ஜாங் உன் ஆய்வு செய்ய இருப்பதாக தெரிகிறது. இதில் இருந்து ரஷியாவுக்கு வட கொரியா ஆயுதங்கள் வழங்க இருப்பதும், ரஷியாவின் தொழில்நுட்பத்தை வடகொரிய பயன்படுத்த வாய்ப்புள்ளதும் ஏறக்குறைய உறுதி செய்யப்பட்டுள்ளது. உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் உதவி செய்து வரும் நிலையில், உக்ரைன் போரில் மிகப்பெரிய அளவில் ஆயுதங்களை செலவழித்துள்ள ரஷியாவுக்கு தற்போது ஆயுதங்கள் தேவைப்படுகிறது. இதனால் வடகொரியாவின் உதவியை நாடியுள்ளது. வெளிநாடுகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதில், அமெரிக்காவுக்கு இணையாக ரஷியா திகழ்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## மசாக்ரே ஆறு பிரச்சினையால் ஹைதி உடனான எல்லைகளை மூடிய டொமினிக் குடியரசு




**சான்டோ டொமிங்கோ: செப். 17,**

**தென் அமெரிக்க நாடான டொமினிகன் குடியரசு மற்றும் அதன் அண்டை நாடான ஹைதி எல்லையில் மசாக்ரே ஆறு பாய்கிறது.**

இந்த ஆற்றின் தண்ணீரை பகிர்ந்து கொள்வதில் இரு நாடுகள் இடையே நீண்ட காலமாக பிரச்சினை உள்ளது. குறிப்பாக அங்குள்ள ஹைதியன் பகுதியில் சிலர் கால்வாயை தாண்டியதால் இந்த பிரச்சினை தீவிரமெடுத்தது. இது தொடர்பாக இரு நாடுகளின் தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தி வந்தனர். ஆனால் அதில் எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை.

இந்தநிலையில் ஹைதியுடனான எல்லைகளை காலவரையின்றி மூடுவதாக டொமினிகன் குடியரசு நாட்டின் அதிபர் லூயிஸ் அபினாடர் அறிவித்தார். அதன்படி நேற்று முன்தினம் வெள்ளிகிழமை அதன் வான், கடல் மற்றும் தரை என அனைத்து எல்லைகளும் மூடப்பட்டன. இது அந்த இரு நாடுகளின் பொருளாதாரத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என கருதப்படுகிறது.

## ஒரே நேரத்தில் அதிக நெருப்பு வளையங்களை சுழற்றி கின்னஸ் சாதனை படைத்த பெண்




**அமெரிக்கா : செப். 17,**

**உலக அளவில் மக்களால் பாராட்டப்பட்ட சர்க்கஸ் கலைஞர்களின் கிரேஸ் குட் என்ற பெண் சிறப்பு வாய்ந்தவர்.**

அமெரிக்காவை சேர்ந்த 18 வயதில் தனது சர்க்கஸ் பயணத்தை தொடங்கிய இவர் அசாதாரண சாகசங்கள் மற்றும் துணிச்சலான நெருப்பு வளையங்களை செய்து கூட்டத்தினரை வியப்பில் ஆழ்த்துவார். பார்வையாளர்களை பிரமிக்க வைக்கும் இவரது சாகச காட்சிகள் மிகவும் பிரசித்தி பெற்றவை.

தற்போது 30 வயதாகும் கிரேஸ் குட் ஒரே நேரத்தில் அதிக நெருப்பு வளையங்களை சுழற்றி கின்னஸ் சாதனை படைத்துள்ளார். 8 நெருப்பு வளையங்களை தன் உடலை சுற்றி தொடர்ந்து இயக்கி அவர் இந்த சாதனையை படைத்துள்ளார். மேலும் பந்தின் மீது நின்று வியக்கத்தக்க வகையில் 28 ஹூலா வளையங்களை வெற்றிகரமாக சுழற்றி மற்றொரு சாதனையையும் அவர் படைத்துள்ளார். இது தொடர்பான புகைப்படங்களை அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். இதை பார்த்த பயனர்கள் பலரும் அவரை பாராட்டி கருத்துக்களை பதிவிட்டு வருகின்றனர்..

## பாகிஸ்தானில் வரலாறு காணாத பெட்ரோல், டீசல் விலை உயர்வு





**லாகூர் : செப். 17,**

**பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் ஆட்சியில் அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்தன.**

இதனால் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அவருடைய ஆட்சி கவிழ்ந்தது. அதன் பின்னர் புதிய பிரதமராக ஷெபாஸ் ஷெரீப் ஆட்சி பொறுப்பேற்றார். இதனைத் தொடர்ந்து இம்ரான்கான் மீது 100-க்கும் அதிகமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

மேலும், அரசுக்கு வந்த பரிசுப்பொருட்களை விற்று சொத்து சேர்த்ததாக இம்ரான்கான் மீது 'தோஷகானா' வழக்கு பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக இம்ரான்கானின் எம்.பி. பதவி பறிபோனது. ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு அவருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து கோர்ட்டு தீர்ப்பு வழங்கியது.

அதைத்தொடர்ந்து இம்ரான்கான் உடனடியாக கைது செய்யப்பட்டு பஞ்சாப் மாகாணத்தின் அட்டாக் சிறையில் அடைக்கப்பட்டார். இந்த சம்பவத்தை தொடர்ந்து கடந்த மாதம் பாகிஸ்தான் நாடாளுமன்றம் இரவோடு இரவாகக் கலைக்கப்பட்டது. இதற்கான பிரகடனத்தைப் பாகிஸ்தான் அதிபர் பிறப்பித்தார். நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையில் இன்னும் 90 நாட்களில் தேர்தல் நடத்தப்பட வாய்ப்பு உள்ளது. இம்ரான்கான் சிறையில் உள்ள நிலையில் அவர் தேர்தலில் போட்டியிடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அதேவேளை, ஷெபாஸ் ஷெரீப் மீண்டும் தேர்தலில் போட்டியிட உள்ளார். தேர்தலில் வெற்றிபெறும் பட்சத்தில் ஷெபாஸ் ஷெரீப் மீண்டும் பிரதமராகும் வாய்ப்புகள் அதிக அளவில் உள்ளன.

பாகிஸ்தான் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் தற்காலிக பிரதமராக பலூசிஸ்தான் எம்.பி. அன்வர் உல் ஹக் ககர் நியமிக்கப்பட்டுள்ளார். தற்காலிக பிரதமராக அன்வர் உல் ஹக் ககர் செயல்பட்டு வரும்நிலையில்பாகிஸ்தானின் நிதிநிலைமை மோசமடைந்து வருகிறது. இந்நிலையில், அந்நாட்டில் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டுள்ளது. நிதி நிலைமையை சமாளிக்க பெட்ரோல் டீசல் மீதான வரி இன்று மேலும் உயர்த்தப்பட்டுள்ளது.

அதன்படி, பெட்ரோல் லிட்டருக்கு 26 ரூபாயும், டீசல் லிட்டருக்கு 17 ரூபாயும் வரி உயர்த்தப்பட்டுள்ளது. ஏற்கனவே பாகிஸ்தானில் ஒரு லிட்டர் பெட்ரோல் 305 ரூபாய்-க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில் தற்போது கூடுதல் வரியுடன் சேர்த்து ஒரு லிட்டர் 331 ரூபாய்-க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதேபோல் ஒரு லிட்டர் டீசல் 311 ரூபாய்-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது வரியுடன் சேர்த்து 329 ரூபாய்-க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால், பாகிஸ்தான் மக்கள் மிகுந்த அவதிக்குள்ளாகியுள்ளனர். பாகிஸ்தான் வரலாற்றில் உச்சபட்ச விலையாக ஒரு லிட்டர் பெட்ரோல் 331 ரூபாய்-க்கும், டீசல் 329 ரூபாய்-க்கு விற்பனை செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும்.

## சீன ராணுவ மந்திரியிடம் ஊழல் விசாரணை ஆயுத கொள்முதலில் முறைகேடு புகார்



**பீஜிங் : செப். 17,**

**சீன ராணுவ மந்திரியாக இருப்பவர் லீஷாங்பூ. இவர் கடந்த இரண்டு வாரமாக பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்கவில்லை. அரசு நிர்வாக விவகாரங்களிலும் கலந்துக் கொள்ளவில்லை. அவர் அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்காதது தொடர்பாக அதிகாரப்பூர்வ தகவல் எதுவும் வெளியிடவில்லை.**

கடந்த ஜூலை மாதம் சீன வெளியுறவுத்துறை மந்திரியாக இருந்த குயின் கேங் திடீரென்று மாயமாகி பொது நிகழ்ச்சிகளை தவிர்த்து வந்த நிலையில் புதிய வெளியுறவுத்துறை மந்திரியாக வாங்யீ நியமிக்கப்பட்டார். இதற்கிடையே சீன ராணுவ மந்திரி மாயமானதால் பரபரப்பு ஏற்பட்டது. ராணுவ மந்திரி லீஷாங்பு எங்கு உள்ளார் என்பது குறித்து அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்படாத நிலையில், அவர் ரகசிய இடத்தில் சீன அதிகாரிகளால் விசாரணை வளையத்தில் இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது. ராணுவ உபகரணங்களை வாங்கியது தொடர்பாக அவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. ஆயுத கொள்முதலில் முறைகேடு நடந்ததாக எழுந்த புகாரால் இந்த விசாரணை நடத்தப்படுவதாக கூறப்படுகிறது.

மேலும் 2017 முதல் 2022-ம் ஆண்டு வரை லீஷாங்பு தலைமையிலான சீன ராணுவத்தின் கொள் முதல் பிரிவை சேர்ந்த 8 மூத்த அதிகாரிகளும் விசாரணை வளையத்தில் உள்ளனர். கடந்த மார்ச் மாதம் ராணுவ மந்திரியாக நியமிக்கப் பட்ட லீஷாங்பு மற்றும் 8 அதிகாரிகள் மீதான விசாரணை ராணுவத்தின் சக்தி வாய்ந்த ஒழுங்குமுறை ஆய்வு குழுவால் மேற்கொள்ளப்படுகிறது. சீன ராணுவ மந்திரி லீஷாங்பு, ஊழல் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க அரசாங்கம் நம்புவதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் அவர் வீட்டு காவலில் வைக்கப்பட்டு உள்ளதாக மற்றொரு தகவல் வெளியாகி உள்ளது. லீ ஷாங்பு, கடைசியாக கடந்த ஆகஸ்ட் 29-ந்தேதி பீஜிங்கில் நடந்த ஆப்பிரிக்க நாடுகளுடனான பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றினார். கடந்த மாத தொடக்கத்தில் ரஷியா, பெலாரஸ் ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 5-வது மக்கள்தொகை உச்சி மாநாடு ஹங்கேரி-பல்கேரியா இடையே இயற்கை எரிவாயு ஒப்பந்தம்




**புடாபெஸ்ட் : செப். 17,**


**திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை வாங்குவது தொடர்பான ஒப்பந்தத்தில் இரு நாடுகளின் எண்ணெய் நிறுவனங்களும் கையெழுத்திட்டன.**

ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் 5-வது மக்கள்தொகை உச்சி மாநாடு நடைபெற்றது. இதில் இத்தாலி, பல்கேரியா, ருமேனியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். அப்போது பல்கேரியா நாட்டின் அதிபர் ருமென் ராதேவை ஹங்கேரி பிரதமர் விக்டர் ஓர்பன் சந்தித்து எரிசக்தி பிரச்சினைகள் குறித்து விவாதித்தார். இதனையடுத்து திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை வாங்குவது தொடர்பான ஒப்பந்தத்தில் இரு நாடுகளின் எண்ணெய் நிறுவனங்களும் கையெழுத்திட்டன.

மேலும் இந்த உச்சி மாநாட்டில் தான்சானியா துணை அதிபர் பிலிப் எம்பாங்கோவிடம் சுற்றுலா, மீன்வளம், நீர் மேலாண்மை போன்ற துறைகளில் பொருளாதார ஒத்துழைப்பு குறித்தும் விவாதிக்கப்பட்டதாக ஹங்கேரி பிரதமரின் செய்தித்தொடர்பாளர் பெர்டலான் ஹவாசி கூறினார்.

## ரூ.9 கோடிக்கு ஏலம் போன இளவரசி டயானாவின் ஸ்வெட்டர்





**இங்கிலாந்து : செப். 17,**

**இங்கிலாந்து அரசர் சார்லசின் முதல் மனைவி டயானா 1997-ம் ஆண்டு கார் விபத்தில் தனது 36-ம் வயதில் பலியானார்.**

இந்நிலையில் இளவரசி டயானா பயன்படுத்திய ஆடைகள் மற்றும் பொருட்கள் ஏலத்திற்கு வருவதும் அவை அதிக விலைக்கு ஏலம் போவதும் சமீபகாலமாக அரங்கேறி வருகிறது. அந்த வகையில் இங்கிலாந்து ஆடம்பர பின்னலாடை நிறுவனம் தயாரித்து இளவரசி டயானா அணிந்த சிகப்பு நிற ஸ்வெட்டர் ஒன்று கடந்த சில நாட்களுக்கு முன்பு ஏலம் விடப்பட்டது. 1981-ம் ஆண்டு இளவரசர் சார்லசுடன் கோல்ப் போட்டி ஒன்றுக்கு டயானா இந்த ஸ்வெட்டரை அணிந்து சென்றிருந்தார். வரிசையாக வெள்ளை நிற ஆடுகள் படம் போட்ட இந்த ஸ்வெட்டரில் ஒன்று மட்டும் கருப்பு நிறத்தில் இருந்தது. இது அப்போது பரபரப்பாக பேசப்பட்டிருந்தது.

1983-ம் ஆண்டு இந்த ஸ்வெட்டரை மீண்டும் ஒரு நிகழ்ச்சியில் டயானா அணிந்து சென்றிருந்தார். தற்போது அந்த ஸ்வெட்டர் ஏலத்திற்கு வந்த போது 1.1 மில்லியன் அமெரிக்கன் டாலருக்கு ஏலம் போனது. இது இந்திய மதிப்பில் சுமார் ரூ.9 கோடி ஆகும். இதற்கு முன்பு டயானா பயன்படுத்திய பொருட்களில் அவர் அணிந்திருந்த ஊதா நிற கவுன் ரூ.4.9 கோடிக்கு ஏலம் போனது அதிக விலைக்கு ஏலம் போன பொருளாக இருந்தது.

## மகனே ஆனாலும் பைடன் மன்னிக்க மாட்டார் வெள்ளை மாளிகை பரபரப்பு அறிக்கை



**நியூயார்க் : செப். 17,**

**துப்பாக்கி வைத்திருந்த விவகாரத்தில் குற்றச்சாட்டு உண்மை என நிரூபிக்கப்பட்டால் தனது மகனை பைடன் மன்னிக்க மாட்டார் என வெள்ளை மாளிகை தெரிவித்து உள்ளது.**

அமெரிக்க அதிபராக ஜோ பைடன் பதவி வகித்து வருகிறார். இவருடைய மகன் ஹன்டர் பைடன். கடந்த 2018-ம் ஆண்டு கைத்துப்பாக்கி ஒன்றை வாங்கும்போது, போதைபொருள் பயன்பாடு பற்றி பொய் கூறினார் என ஹன்டர் மீது குற்றச்சாட்டு எழுந்தது.

போதையின் பாதிப்பில் இருந்தபோது, அவர் ஆயுதம் வாங்கியுள்ளார் என்றும், குண்டு நிரப்பப்படாத துப்பாக்கியை 11 நாட்கள் வரை ஹன்டர் தன்வசம் வைத்திருந்துள்ளார் என்றும் அவர் மீது சட்டவிரோத குற்றச்சாட்டு எழுந்தது. இதில், ஹன்டர் மீது உள்ள குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 10 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட கூடும்.

எனினும், இந்த குற்றச்சாட்டுகளை ஹன்டரின் வழக்கறிஞர் மறுத்துள்ளார். ஆனால், எதிர்க்கட்சியான குடியரசு கட்சியினர், தன்னுடைய மகனை பாதுகாப்பதற்காக, அதிபர் பைடன் பதவியை தவறாக பயன்படுத்தி விட்டார் என குற்றச்சாட்டாக கூறி வருகின்றனர். இந்நிலையில், இந்த குற்றச்சாட்டில் ஹன்டர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், தன்னுடைய மகனின் தண்டனையை பைடன் குறைத்து விடுவாரா? என வெள்ளை மாளிகையின் ஊடக செயலாளர் கரீன் ஜீன்-பியர்ரேவிடம் கேட்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த பியர்ரே, இந்த கேள்விக்கு முன்பே நான் பதில் அளித்து உள்ளேன். இந்த கேள்வியானது, நீண்ட காலத்திற்கு முன்பு என்னிடம் கேட்கப்படவில்லை. 2 வாரங்களுக்கு முன்பே கேட்கப்பட்டு இருந்தது. என்னுடைய பதிலை அளித்து இருந்தேன். அதில் இல்லை என்று உறுதியாக தெரிவித்து இருந்தேன் என கூறியுள்ளார். அமெரிக்காவில் துப்பாக்கி கலாசாரம் அதிகரித்து வருகிறது என்ற குற்றச்சாட்டு நீண்டகாலம் இருந்து வருகிறது. இதனால், வயது வித்தியாசமின்றி சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை துப்பாக்கி வைத்திருக்கின்றனர். துப்பாக்கி சூடு நடத்தி அவ்வப்போது பொதுமக்களில் பலர் பலியாகி வருகின்றனர். இதற்கு பைடன் கண்டனம் தெரிவித்து வருகிறார். இதனால், கடுமையான சட்டம் இயற்றவும் முயற்சி நடந்து வருகிறது.

இந்நிலையில், துப்பாக்கி வைத்திருந்த விவகாரத்தில் ஹன்டர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், மகனே ஆனாலும் பைடன் மன்னிக்க மாட்டார் என்று வெள்ளை மாளிகை தெரிவித்து உள்ளது.


## கனடாவில் சீக்கிய மாணவர் மீது தாக்குதல் இந்தியா கண்டனம்

**கனடா : செப். 17,**

**கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் 17 வயது சீக்கிய மாணவர் தாக்கப்பட்டுள்ளார்.**

உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் அவர், ரட்லேண்ட சாலை தெற்கு-ராப்பூர் சாலை கிழக்கு சந்திப்பில், பஸ்சில் இருந்து இறங்கி நடந்து சென்றபோது இரண்டு பேர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்த தாக்குதலுக்கு முன்பு பஸ்சில் அவர்கள் இடையே தகராறு ஏற்பட்டதாகவும், இதனால் அவர்கள் பஸ்சில் இருந்து வெளியேற்றப்பட்டனர் என்றும் போலீசார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்துக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து இந்திய துணை தூதரகம் கூறும்போது, "சீக்கிய மாணவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாக கண்டிக்கிறோம். இந்த சம்பவத்தை விசாரித்து குற்றவாளிகள் மீது உடனே நடவடிக்கை எடுக்குமாறு கனடா அதிகாரிகளை கேட்டுக் கொள்கிறோம்" என்று தெரிவித்து உள்ளது.



# ஒரே நாடு ஒரே தேர்தல்
## ஆலோசனைக் கூட்டத்திற்கு தேதி அறிவிப்பு

# லக்னோ : வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்து ஐந்து பேர் பலி






# கொடநாடு : டிரைவர் கனகராஜின் அண்ணன் மருத்துவமனையில் அனுமதி

சென்னை / புதுக்கோட்டை | 17.09.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ஈ. வெ. இராமசாமி , இந்திய அரசியல்வாதி, திராவிடர் கழக நிறுவனர் (பி.1879) (இ.1973)



வ. ரா. , தமிழக எழுத்தாளர் (பி.1889) (இ.1951)



வில்லியம் கொபல்லாவ , இலங்கையின் ஆளுநர், முதலாவது ஜனாதிபதி (பி.1897) (இ.1981)



நரேந்திர மோதி , இந்தியாவின் 15வது பிரதமர் (பி.1950)



## இன்றைய நினைவு நாள்

கு. வன்னியசிங்கம் , இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி.1911) (இ.1959)



திரு வி. க. , தமிழறிஞர் (பி.1883) (இ.1953)



எம். ஆர். ராதா , தமிழ்த் திரைப்பட, நாடக நடிகர் (பி.1907) (இ.1979)

